




# திருக்கோயில்

அக்டோபர் 1987, விலை ரூ. 2











மயிலைஅருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு வி. வி. சுவாமிநாதன் பி.எஸ்சி., பி. எல். இவ்விழாவில் கலந்து கொண்டு, அரசாங்க உதவித் தொகை பெறும் முதியோர் களுக்கு வேட்டி, சேலைகள் வழங்கினார்.









அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் மழைவேண்டி வருண ஜெபம் நடத்தப்பெற்றது. அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு வி.வி. சுவாமிநாதன் கலந்துகொண்டார்.





மேதகு குடியரசுத் தலைவர் திருமிகு ஆர். வெங்கட்டராமன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலயத் தக்கார் திரு க. பொன்னுசாமி பி.எஸ்சி. அவர்கள் பழநி முருகனுக்குப் படைக்கப் பெற்ற மலர்வேல் வழங்குகிறார்.

முகப்பு: மண்ணில் வைகுந்தமாய் விளங்கும்
திருமலையும்,
திருமலை சீனிவாசப் பெருமாளும்
இவ்விதழ் முகப்பை
அலங்கரிக்கின்றனர்.

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை : 29 | திருவள்ளுவர் ஆண்டு 2018 பிரபவ ஆண்டு ஐப்பசித் திங்கள் அக்டோபர் 1987 விலை ரூ. 2-00 | மணி : 10 |
|---|---|---|

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்

**உயர்திரு**
**ஆணையர் அவர்கள்**
**அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை-600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா ரூ 24.00 மட்டும்.**

**திருக்கோயில் இதழின் ஆயுள் சந்தா ரூ. 300 மட்டும்.**

இதழ்கள் தவறாமல் கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்கவேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.** விற்பனையாளர்கள் மற்ற விவரங்களைத் தெரிந்து கொள்ள இவ்வலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## பொருளடக்கம்

தீபாவளி -திருமுருக கிருபானந்த வாரியார்

ஆறிரு தடந்தோள் வாழ்க -தி. இராச. கல்யாணசுந்தரம்

சிவாலய வழிபாட்டுமுறை

சூரியனார் கோயில் -சிவ. முத்துகுமரவேல்

வேற்காடுறையும் வேதபுரீஸ்வரர் -சு. சண்முகம்

பங்கமில் குணத்தான் பரதன் -புலவர் திலகம் கீரன்

திருவள்ளுவர் திருமூலர் வள்ளலார் -புலவர் சிவ. இராமலிங்கம்

பாரதப் போரில் பார்த்தசாரதி -டாக்டர் த. அமிர்தலிங்கம்



# தீபாவளி

திருமுருக கிருபானந்த வாரியார்

தீபாவளி என்னும் நன்னாளைப் பொன்னாளாக யாண்டும் கொண்டாடுகிறார்கள். ஆனால் அதன் உண்மை அறிந்தவர்கள் ஒரு சிலரே ஆவார்கள். அதனைச் சிறிது இங்கு விளக்குவாம்.

பெரும்பாலோர் நரகாசூரனைக் கண்ண பிரான் சங்கரித்தார். அந்த அரக்கனை அழித்த நாளே தீபாவளி என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

நரகாசூரனைச் சங்கரித்த நாள் அதுவாக இருக்கட்டும். ஆனால் ஒரு கொடியவனைக்கொன்ற நாளுக்கு ஒரு கொண்டாட்டம் நிகழ்வது யாண்டும் எக்காலத்தும் இருந்ததில்லை. அப்படியிருக்கு மாயின் இரணியனைக் கொன்ற நாள், இராவணனைக் கொன்ற நாள், கம்சனைக் கொன்ற நாள், இடும்பனை - பகனைக் கொன்றநாள், அவ்வாறே அந்தகா சூரன், சலந்தராசூரன், இரண்யாட்சன், திருணாவர்த்தன், இப்படிப் புகழ் படைத்த அரக்கர்கள் ஒவ்வொருவரையும் கொன்ற நாட்களை எல்லாம் கொண்டாடுவதாயின் ஆயுளே அதற்குச் சரியாகி விடும். ஆகவே நரகாசூரனைக் கொன்றதற்காக தீபாவளி ஏற்பட்டதன்று.

தீபம் - விளக்கு; ஆவளி—வரிசை.

தீபத்தை வரிசையாக வைத்துச் சிவபெருமானை வழிபடுவதற்கு உரியநாள் தீபாவளி என உணர்க. தீபமங்கள ஜோதியாக விளங்கும் பெருமானை நிரம்பவும் விளக்கேற்றி வணங்கினார்கள் நமது முன்னோர்கள். திருக்கார்த்திகையில் விளக்கேற்றி வணங்குகின்றார்கள் அன்றோ?

'விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்' என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு.

சிவ விரதம் எட்டு எனக் கந்தபுராணத்தின் ஏழாவது காண்டமாகிய உபதேச காண்டம் புகல்கின்றது.

அவையாவன :

1. சோம வார விரதம்
2. உமா மகேச்சுர விரதம் (கார்த்திகை மாதம் பௌர்ணமி)
3. திருவாதிரை விரதம் (மார்கழியில்)
4. சிவராத்திரி விரதம் (மாசியில்)
5. கல்யாண விரதம் (பங்குனி உத்திரம்)
6. பாசுபத விரதம் (தைப்பூசம்)
7. அஷ்டமி விரதம் (வைகாசி பூர்வபட்சஅஷ்டமி)
8. கேதார மாவிரதம் (இதுதான் தீபாவளி)

''தொல்லைவல்வினைகழித்துத் தருஞ்சோமவாரம்
ஆதிரை நோன்பன்றிப்
புல்லியவுமா மகேச்சுரஞ் சிவராத்திரி முறையில்
பொருந்த நோற்கப்
பல்வினையுந் தொலைத்திடு கேதாரமண விரத
மிவை பரம நோன்பு
கொள்ளுறு சூற் படைவிரதம் எனுமெட்டும்
சிவவிரதம் குணிக்குங் காலே''

## இந்த விரதம் நோற்கும் முறை

புரட்டாசி மாதம் பூர்வபட்சம் அஷ்டமியில் தொடங்குதல் வேண்டும். நிறைகுடம் வைத்து அதில் சிவபெருமானை ஆவாகனம் செய்து இருபத்தொரு இழையுடைய நூலைக் கையில் புனைந்து அருச்சனை செய்து தூப தீப நிவேதனம் புரிந்து வழிபட வேண்டும்.

ஐப்பசி மாத அமாவாசைக்கு முந்தின நாள் சதுர்த்தசியினன்று அதிகாலை எழுந்து நீராடி, தூய ஆடை உடுத்து நெல்லின் மீது நிறை குடம் வைத்து மாவிலையும் தருப்பையும் வைத்து அதில் சிவமூர்த்தியை நிறுவி, சிவமாகவே பாவனை புரிந்து தூபதீப நிவேதனங்கள் செய்து வழிபட வேண்டும்.

மறுநாள் அமாவாசை அன்று காப்பை அவிழ்த்து விட்டு உணவருந்த வேண்டும். இந்த விரதம் கேதார விரதம் எனப்படும்.

பிருங்கி முனிவர் சக்தியை விலக்கிச் சிவ பெருமானை மட்டும் வலம் வந்து வழிபட்ட காரணத்தினால் உமா தேவியார் வெகுண்டு இடப் பாகம் பெறும் பொருட்டு, திருக்கயிலாய மலையினின்றும் நீங்கி கௌதம முனிவருடையவனத்தை அடைந்தனர். அவ்வனம் அம்பிகையின் வரவினால் மிகவும் செழிப்புற்றது. பாம்பும் தவளையும், அரவும் கீரியும், உரகமும் கருடனும் உறவாடின.

கௌதமர் கௌரியைத் தொழுது துதித்தனர். இந்த விரதத்தைக் கௌதமர் கூற விதிப்படி உமையம்மையார் நோற்று இறைவருடைய இடப் பாகத்தைப் பெற்று மகிழ்ந்தனர். கௌரி நோற்ற காரணத்தால் கேதார கௌரி விரதம் எனவும் இது பேர் பெற்றது.

இருபத்தொரு நாள் அனுட்டிக்க முடியாதவர்கள் ஐப்பசி தேய்பிறை சதுர்த்தசியன்றுமட்டும் மேற்கூறிய முறைப்படி அனுட்டிக்க வேண்டும்.

இவ்விரதத்தை எல்லோரும் மேற்கொண்டு அன்று சிவமூர்த்தியை வழிபட்டு நலம் பெறுதல் வேண்டும். தீபங்களை வரிசையாக ஏற்றி அன்புடன் வழிபட வேண்டும்.

# ஆறிரு தடந்தோள் வாழ்க!



**தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ்.,**
**ஆணையாளர்,**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34.**

உலகில் மக்கள் தோன்றிய முதல் நிலப்பகுதி உலக நடுக்கோட்டுப் பகுதியே என்பர். அதிலும் குறிப்பாக நமது தமிழ் நாட்டின் குறிஞ்சிநிலப் பகுதியில் தான் முதன் முதல் மனிதன் தோன்றினான் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். உலகில் கல்தோன்றி மண்தோன்றாக்காலத்தே தோன்றிய மூத்த குடியினரான நம் தமிழ் மக்கள் வழிபட்ட பழம் பெரும் கடவுள்தான் முருகக் கடவுள். குறிஞ்சிக் கிழவன் என முருகப் பெருமானை அருணகிரிநாதர் சிறப்பித்துக் குறிப்பிடுகிறார். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய நம் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்திலும் குறிஞ்சிநிலக் கடவுளாக முருகப்பெருமான் சுட்டப்பட்டிருப்பதும் இங்கு நினையத் தக்கது.

நம் தமிழ்க் கடவுள் ஆகிய முருகப் பெருமான், தமிழாகவும் திகழும் சிறப்பை நம் ஆன்றோர்கள் சுட்டுகின்றனர். தமிழ் மொழியின் மெய்யெழுத்துக்கள் பதினெட்டு; அவை முருகப் பெருமானின் ஆறுமுகங்களிலும் அமைந்திருக்கும் பதினெட்டுக் கண்களாகும். தமிழ்மொழியின் உயிரெழுத்துக்கள் பன்னிரெண்டு; அவை முருகப் பெருமானுடைய பன்னிரெண்டு தோள்களாகும். தமிழில் வல்லினம், மெல்லினம் இடையினம் என வழங்கும் இன எழுத்துக்கள் ஆறு; அவை முருகனுடைய ஆறு திருமுகங்கள். நுண்ணிய ஓசையுடைய ஆய்த எழுத்தே ஒப்புயர்வற்ற நிலையில் தனிச் சிறப்புற்றுத் திகழும் முருகப் பெருமானின் வேலும் ஆகும். ஆகவே தமிழ்த் தெய்வமாகிய முருகன் தமிழ் வடிவினனாகவும் திகழ்கிறான் என்று புலவர் புராணம் எனும் நூல் கூறுகின்றது.

''கண்நிகர் மெய்யும், சென்னிக்
கணம்உறழ் இனத்தின்கூறும்
திண்ணிய புயங்க ளேபோல்
திகழ்தரும் உயிரும், வேறென்று
எண்ணிடற் கரியதாகும்
எஃகமும் இயலிற் காட்டும்
புண்ணிய முருகன் செய்ய
பொற்பதம் போற்றி வாழ்வாம்''

—புலவர் புராணம்

தமிழுக்கு அமைந்திருந்த தலைச் சங்கத்தில் முருகப்பெருமான் தாமும் புலவராக வீற்றிருந்து தமிழை ஆய்ந்திருக்கிறார். அதனாலேயே முருகனுக்குச் சங்கத் தமிழின் தலைமைப் புலவன் என்ற பெயரும் அமைந்தது. குமரகுருபர அடிகளாரும் ''சங்கத் தமிழின் தலைமைப் புலவா தாலே தாலேலோ'' என்று பாடியிருக்கிறார். பிரணவ மந்திரத்தின் பொருளைச் சிவபெருமானுக்கும் முருகப் பெருமான் தமிழ் மொழியின் வாயிலாகவே உபதேசித்தருளினார் என்பதை அருணகிரிநாதர்

''கொன்றைச் சடையர்க்கு ஒன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழாற் பகர்வோனே''

என்று தம் திருப்புகழில் பாடியிருக்கிறார். தொல்காப்பியரின் குருவான அகத்தியருக்குத் தமிழ் மொழியைக் கற்பித்தவரும் முருகப்பெருமானே ஆவார். இவ்வாறு தமிழ்க் கடவுளாகவும், தமிழ் மொழியின் வடிவமாகவும் திகழும் முருகப்பெருமானைப் போன்ற வேறு உண்மையான தெய்வம் உலகில் இல்லை. குமரகுருபரரும்

''மெய்கண்ட தெய்வம் இத்தெய்வம் அல்லாற் புவியில் வேறில்லை'' என்று குறிப்பிடுகிறார். அத்தகைய முருகப்பெருமானின் பெருமையை எடுத்து இயம்புவது எவருக்கும் எத்தகையவர்க்கும் எளியது அல்ல.

''ஞானந்தான் உருவாகிய நாயகன் இயல்பை
யானும் நீயுமாய் இசைத்தும் என்றால்
அஃதெளிதோ''

என்று சிங்கமுகாசூரன் சூரபதுமனிடம் எடுத்துரைப்பதாக வரும் கந்தப்புராணப் பாடல் வரிகள் இங்கு நினையத்தக்கன.

உண்மையில் சிவசக்தியே சூரபதுமனை வெல்லும்பொருட்டு ஆறுமுகங்களோடும், பன்னிரு கரங்களோடும் முருகப்பெருமானாகத் தோன்றியது. தம்முடைய சிவசக்தி அல்லா பிறசக்திகளால் சூரபதுமன் அழியான் என்று சிவபெருமான் சூரபதுமனுக்கு வரம் அளித்திருந்தார். சிவபெருமானிடம் வரம் பெற்ற பிறகு சூரபதுமனின் கொடுமைகள் எல்லை மீறலாயின. தேவர்களும், முனிவர்களும் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சூரபதுமனை வெல்லக் கூடிய சக்தியை முருகப் பெருமானாக சிவ்பெரு

மானே தோற்றுவித்தார். தமக்கு இயல்பாக உள்ள ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோபாதம் என்னும் ஐந்து முகங்களுடன் கீழ் நோக்கிய அதோ முகம் எனும் முகத்தையும் கொண்டு, ஆறு நெற்றிக் கண்களிலிருந்து ஆறு தீப்பொறிகளை வெளியே விடுத்தார். அந்த ஆறு தீப்பொறிகளை சிவபெருமானே தம் திருக்கையால் எடுத்து வாயு தேவனிடம் தந்தார். வாயுதேவன் அவற்றை அக்கினி பகவானிடம் அளித்தான். அக்கினி பகவான் குளிர்ந்த கங்கையாற்றில் விட்டான். கங்கை தனது மடியில் தாங்கிச் சரவணப் பொய்கையில் சேர்த்தாள். அங்கு அப்பொறிகள் ஆறும் ஆறு குழந்தைகளாகின. இதுவே உலகம் உய்ய ஆறுமுகப் பெருமான் தோன்றிய அருள் வரலாறாகும். இதனைக் கந்தபுராணம்

''அருவமும் உருவமும் ஆகி
அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி ஆகக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய''

என்று பாடுகிறது.

முருகப் பெருமானுக்கு முகங்கள் ஆறு, நாமங்களோ நூறு. அவையனைத்தும் அவன் பெருமையை, பெருங்குணத்தைச் செப்புகின்றன. முருகப்பெருமானின் நாமங்கள் சில தெரிவிக்கும் அவன் பெருமையையும் ஈங்கு எண்ணிப் பார்ப்போம். முருகன் எனும் சொல், அழகு, இளமை மணம், தேன், தெய்வத் தன்மை எனும் பல பொருள்களைக் குறிக்கிறது. ''அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருகன்'' என நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடுகிறார். கந்தன் எனும் நாமமும் மிக அதிகமாகப் பயின்று வழங்கி வரும் சொல்லாகும். கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, கந்தர் கலிவெண்பா, கந்த புராணம், கந்தர் சஷ்டிக் கவசம் என அவனுடைய நூல்கள் பலவும் கந்தன் எனும் நாமத்துடனேயே சார்த்தி வழங்கப் பெறுவது குறிப்பிடத் தக்கது. கார்த்திகை மகளிர் அறுவரிடமும் ஆறு உருவங்களோடு வளர்ந்து வந்தார் முருகர். உமாதேவியார் ஆறுமுருகர்களை ஒருசேர அரவணைக்க அன்று முதல் முருகருக்கு உடல் ஒன்றும், முகங்கள் ஆறும் ஆயின. இவ்வாறு ஒன்றாகத் திரட்டப்பட்ட வடிவத்தைக் கொண்ட முருகரே கந்தர் என அழைக்கப்படுகிறார்.

''சேயவன் வடிவம் ஆறும்,
திரட்டி நீ ஒன்றாய் செய்தாய்
ஆயத னாலே கந்தன்
ஆமெனும் நாமம், பெற்றான்'' என்கிறார்

கச்சியப்பர். கந்தன் என்பதற்குப் பகைவர்களை வற்றச் செய்பவன் என்றும், யாவருக்கும் பற்றுக் கோடாகத் திகழ்பவன் என்றும் கூட பொருள்கள் உண்டு.

குமரன் என்ற பெயர் (கு-மலம், மாரன்-மரிக்கச் செய்பவன்) உயிர்களின் மலப்பிணிப்பை அழித்தொழிக்க வல்லவன் என்ற பொருளில் வழங்கி வருகிறது. குகன் எனும் திருப்பெயர் அடியார்களின் இதயம் ஆகிய குகையில் எழுந்தருளி விளங்குபவன் என்ற பொருளில் வழங்கி வருகிறது. முருகனுக்கு உரிய நட்சத்திரம் விசாகம் ஆதலால்முருகன் விசாகன் எனவும் அழைக்கப்படுகிறான். விசாகன் என்பதற்கு (வி-பறவை; மயில், சாகன்-சஞ்சரிக்கிறவன்) மயிலை ஊர்தியாகக் கொண்டவன் எனவும் பொருள் கூறுவர். நாணற்புதர்கள் செறிந்த பொய்கையில் தோன்றிய காரணம் பற்றி முருகனுக்குச் சரவணபவன் என்பதும் பெயராகும். சுப்பிரமணியம் எனும் திருப்பெயருக்கு ஆனந்தத்தையே சிறப்பியல்பு ஆக உடைய சிவபரம்பொருளினின்று தோன்றி அதனின் வேறல்லதாய் விளங்குவது என்று பொருள் கூறப்படுகிறது. சு-சுகம், ஆனந்தம்; பிரம்மம்-சிவபரம்பொருள், நயம்- அதனின்றும் தோன்றி ஒளிர்வது எனப்பொருள் கொள்ள வேண்டும். சிவசக்தியே முருக சக்தி என்பதை சிவபெருமான் தாமே எடுத்து விளக்கியிருப்பதை

''ஆதலின் நமது சக்தி
ஆறுமுகம் அவனும் யாமும்
பேதகம் அன்றால், நம்போற்
பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவிபோல்வான்
யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும்
போற்றினர்க் கருள வல்லான்''

என வரும் கந்தப் புராணப் பாடல் தெரிவிக்கின்றது.

முருகப் பெருமான் போற்றுவோர்க்கு மட்டும் அருளவல்லவன் அல்லன். போற்றார்க்கும் அருள வல்லவன், கொடுமைகள் புரிந்தோர்க்கும் மன்னித்து கருணைக் காட்டி அருளவல்லவன். கொடுமையின் வடிவமான சூரபதுமனைக் கூட கொன்றிடாமல் அருள்புரிந்த கருணையின் வடிவம் அன்றோ முருகப்பெருமான்.

''தீயவை புரிந்தார் ஏனும்
குமரவேள் திருமுன் உற்றால்
தூயவ ராகி மேலைத்
தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ
அடுசமர் அந்நாள் செய்த
மாயையின் மகனும் அன்றோ
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்.''

என்று பாடுகிறது கந்தப் புராணம். தம்மிடம் மாயப் போர் புரிந்து தோற்று ஓடி கடல் நடுவே மாமரமாய் நின்ற சூரபதுமனை வேலால் இருகூறாக்கினார் முருகப்பெருமான். அப்பொழுதும் சேவலும் மயிலும் ஆகி சூரபதுமன் முருகனுடன் போரிட சீறி வந்தான். சேவலைத் தம் கொடியாகவும், மயிலைத் தம் வாகனமாகவும் கொண்டு, முருகர் ''பகைவரைக் கொல்வது வீரம் அல்ல, ஆட்கொள்வதே சிறந்த வீரம்'' என அவனிக்கு உணர்த்திய அருள்வரலாற்றைத்தானே கந்தபுராணத்தில் காணுகின்றோம். கந்த புராணத்தை ஆராய்ந்த அறிஞர் பெருமக்கள் பலரும் சூரபதுமன், சிங்கமுகாசுரன் ,தாருகாசுரன் ஆகிய மூவரை முறையே ஆணவம், கன்மம், மாயையாகவும், ஞானமாகிய வேலால் அஞ்ஞானத்தை வென்று முருகப் பெருமான் ஆட்கொண்ட வரலாறே கந்த புராணத்தின் உட்பொருள் எனவும் தெளிவுபடுத்துகின்றனர்.

முருகப் பெருமானை வணங்கும் அடியார்கள் அஞ்ஞானம் நீங்கி, மெய்ஞானம் பெறுவர் என்பதே கந்தபுராண உட்பொருளாகும். அவன் உயர்ந்தவர்களுக்கு மட்டும் அல்லாமல் எளிய மக்களுக்கும் அருள்புரியும் தெய்வமாகத் திகழ்வதைத்தான், தெய்வானையை மணம் கொண்டதோடு, வள்ளியையும் மணம் கொண்ட வரலாறு நமக்கு உணர்த்துகிறது. முருக நாமம் ஓதும் அடியார்கள் யாவராயினும் அவர்களை நோய்நொடிகள் அணுகாது; இம்மைக்கு வேண்டிய பொருட் செல்வமும் பெற்று மகிழ்வுற்று வாழ்ந்து அஞ்ஞானம் நீங்கி மெய்ஞான முற்றுப் பரகதியும் பெறுவர் என்பதையே அவன் அருள்பெற்றுய்ந்த ஆன்மீக ஞானிகள் எல்லாம் நமக்குத் தெளிவாக்கியுள்ளார்கள்.

இன்னும் ஒரு பாடலில், தம் அடியார் வாடி மனம் வருந்த ஒரு சொல்லையும் கூறாதவன் முருகன், அவன்தன் அடியார் துன்பத்தைக் காணவும் பொறுக்கமாட்டாதவன் என்பதை

''நோவ உரையான் நம்மை நோவக்கண்
பார்த்திடான்
சாவவிழையான் சலிய விடான்-பாவனைய
சொல்வாய்க் குறத்தி துணைபிரியாப்
போரூரன்
நல்வாய்ப் பரையன் நெஞ்சேநாடு''

என்று பாடியிருக்கக் காண்கிறோம்.



''முருகா என உனை ஓதும்
தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார்
வியாதி அடைந்து நையார்
ஒரு காலமும் துன்பம் எய்தார்
பரகதி உற்றிடுவார்
பொருகாலன் நாடு புகார்
சமரா புரிப் புண்ணியனே''

என்று முருகப் பெருமானின் திருவருள் நலத்தினைப் போற்றுகிறார், சிதம்பரசுவாமிகள். அவரே

முருகப் பெருமான் தம் அடியவர்களுக்கு அருளும் பொருட்டே ஆறுபடை வீடுகளிலும், கோயில் கொண்டிருக்கிறார். திருச்செந்தூர் முருகனுடைய முதல் படைவீடு; சூரபதுமனுக்கு அருள் புரிந்த தலம் இதுவேயாகும். திருப்பரங்குன்றம் இரண்டாவது படைவீடு, முருகர் தெய்வயானையை மணம் கொண்ட திருத்தலம் இதுவேயாகும். பழநி முருகப் பெருமானின் மூன்றாவது படைவீடு. திருவேரகம் நான்காவது படைவீடு. பிரணவப் பொருளை தந்தைக்கே உபதேசித்து தகப்பன் சுவாமி எனப் பெயர் கொண்ட திருத்தலம் சுவாமிமலை எனும் திருவேரகம் ஆகும். வள்ளியை முருகப் பெரு

மான் காதல் மணம் கொண்ட திருத்தலம் திருத்தணிகை. இது ஐந்தாம் படைவீடு. சுட்டப்பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா என்று ஔவையிடம் அறிவு விளையாட்டு புரிந்த திருத்தலம் ஆகிய பழமுதிர்ச் சோலையே ஆறாம் படைவீடு. இந்த ஆறு படைவீடுகளில் மட்டும் அல்லாமல் குன்றிருக்கும் இடங்கள் அனைத்திலும் குமரன் கோயில் கொண்டு அடியவர்க்கு அருள்புரிந்து வருகிறான்.

மூன்றாம் படைவீடாகிய பழநியில் முருகன் கோயில் கொண்ட வரலாறு நாம் அனைவரும் அறிந்த ஒன்றுதான், எனினும் அதில் அமைந்திருக்கும் தத்துவம் மிக ஆழமானது. நாரதர் ஒருநாள் ஞானப் பழம் ஒன்றுடன் கயிலைக்கு வந்து சிவ பெருமானிடம் வழங்கினார். அந்த ஞானப் பழத்தைக் கணபதியும் தமக்குத் தருமாறு வேண்டினார். முருகனும் தமக்குத் தருமாறு வேண்டினார். ஞானப் பழத்தைப் பகிர்ந்து உண்டால் பலன் இல்லை என்பதால் பழத்தைத் தருவதற்கு ஒரு போட்டியை வைத்தார் சிவபெருமான். ''உலகை முதலில் வலம் வருவோர்க்கு ஞானப்பழம்'' என்று சிவபெருமான் கூற தம் வாகனமாகிய மயிலில் ஏறி முருகர் உலகை வலம் வரப் புறப்பட்டார். கணபதியோ ''அன்னையும் தந்தையும் தானே உலகம்'' என்பதால் அம்மையப்பரைச் சுற்றி வலம் வந்து வணங்கிக் கனியைப் பெற்றுக் கொண்டார். முருகர் உலகை வலம் வந்து பார்த்தபோது கனி கணபதியின் கையில் இருக்கக் கோபம் கொண்டார். தமக்குப் பழம் கிடைக்க வில்லையே என்று கோபம் கொண்டு ஆண்டியின் கோலம் பூண்டு பூமியில் ஒரு மலை மீது வந்து நின்றார். அம்மையும் அப்பரும் முருகரைச் சமாதானப் படுத்தினர். ''நீயே சிவஞானப் பழம். உனக்கு வேறு ஒரு பழம் வேண்டுமா? பழம் காரணமாகக் கோபம் கொண்டு நீ நின்ற காரணத்தால் இம்மலை ''பழம்நீ'' எனும் பெயர் பெற்று விளங்கட்டும்'' எனத் திருவருள் புரிந்ததே பழநித் தலவரலாறு ஆகும்.

பிரணவப் பொருளைத் தந்தைக்கு உபதேசித்த முருகனுக்கு ''அன்னையும் தந்தையும் உலகம்'' என்பது தெரியாமல் இருந்தது என்று நாம் கருதுவது தவறாகும். அனைத்தும் அறிந்த அவர் ஞானக் கனியையும் கணபதிக்கு வழங்கக் கருணை கொண்டே மயிலேறி உலகை வலம் வந்தார். உலக மக்களுக்குத் தரிசனம் தந்து அவர்கள் கோரும் வரங்களையும் வழங்கும் பொருட்டுக் கோவில் கொள்ளவே கோபங் எனவும் தம் நடிப்பைக் காட்டிப் பழநிமலையின் மீது வந்து முருகர் நின்றார்.

''பிரணவப் பொருளைக் கூறும்
சரவண அறிவாய் ஈன்ற
இருவரும் அன்றோ ஞாலம்
ஆயினும் அன்பால் முன்னோன்
அருந்தவே கனியைத் தந்து
சிறந்திடும் விழைவால் நீயே
விரும்பிமூ வுலகும் சுற்றி
வந்தனை உயிரே போற்றி''

''அன்பினால் ஆண்டி யாகிச்
சினமென நடிப்பைக் காட்டி
மன்பதை வாழும் மாந்தர்
கண்டுமே நாளும் போற்றப்
பொன்மனம் கொண்ட வேலோய்
இன்புற வந்திங் கேறும்
தென்திருப் பழநிக் குன்றம்
தொண்டனும் செய்வோம் போற்றி''


(கற்கண்டுக் கந்தபுராணம் 15,16)

இப்பாடல்களில் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களே ஏற்புடைய கருத்துக்கள் என்பது எண்ணிப் பார்த்தால் தெளிவாகும். முருகப்பெருமான் ஆண்டிக் கோலம் பூண்டிருப்பதும் வந்தவர்க்கெல்லாம் வாரி வாரி வழங்கும் அவர்தம் எல்லையற்ற அருட் கருணையையே காட்டுகிறது. தமக்கென ஒன்றும் வேண்டாமல் ஆண்டிக்கோலம் பூண்டு, தம்மை அண்டினவர்க்கெல்லாம் வேண்டுவன அனைத்தையும் வழங்கும் பழநி வள்ளலின் பெருமைக்கு அளவேது?

தியாகத்தின் திருவுருவமாகத் திகழும் திருமுருகன் திருநாமத்தையும், அவன் திருப்புகழைச் செப்பும் பாக்களையும் நாளும் ஓதும் அடியார்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வடிவேல் முருகன் திருமலரடிப் பேற்றினையும் பெற்றுய்வர் என்பது திண்ணம். குமரா நம என்று முருகனின் நாமத்தை ஓர்முறை சொன்னவர்களும் அமராபதி ஆளக்கூடிய அருஞ்சிறப்பைப் பெறுவர் என்றால் முருகநாமத்தின் மகிமைக்கு எல்லை ஏது?



இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதர் ஆலயத்தில் நடைபெற்ற ஆடி அமாவாசை விழாவில் ஆணையர் திரு தி. இராச. கல்யாண சுந்தரம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் அன்னதானம் வழங்கியபோது எடுத்த படம்.



அருள்மிகு பழநி, தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் 365 சிறப்புத் திருமணங்கள் நடத்தப்படும் என மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு வி.வி.சுவாமிநாதன், பி.எஸ்சி., பி.எல்., அவர்கள் அறிவித்துள்ளார்கள். அத்திட்டத்தின் கீழ் அண்மையில் 25 சிறப்புத் திருமணங்கள் நடத்தி வைக்கப் பெற்றன. பழநித் தக்கார் திரு.க.பொன்னுசாமி அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இத்திருமண விழாவில் நம்முடைய அறநிலையத்துறை ஆணையர் திரு தி.இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் கலந்துகொண்டு மங்கல நாண் வழங்குகிறார்.

அறநிலையத்துறையின் வரப்பிரசாதமான இச்சிறப்புத் திருமணத் திட்டங்களில் பெருவாரியான மக்கள் பங்கு பெற்று பயன் அடைந்து முருகனின் திருவருளைப் பெறலாமே.

---

''குமரா நமஎன்று கூறினார் ஓர்கால்
அமரா பதிஆள்வர் அன்றி-யமராசன்
கைபுகுதார் போரூரான் கால்புகுவார்
தாய்உதரப்
பைபுகுதார் சேரார் பயம்''

என்பது அவர் தம் திருவாக்கு.


முருகப்பெருமானுக்குரிய விரதங்களில் சிறந்தது கிருத்திகை விரதமும் கந்தர் சஷ்டி விரதமும் ஆகும். கிருத்திகை விரதம் திங்கள் தோறும் இருக்கலாம். ஆண்டிற்கொருமுறை ஐப்பசி மாதம் வளர்பிறை, முதல் ஆறு நாட்களும் இருப்பது கந்தர் சஷ்டி விரதம். கந்தர் சஷ்டி விரதம் இருந்தால் சகல காரியங்களும் சித்தியாகும் என்பது ஆன்றோர் வாக்கு. மக்கள் பேறு வாய்க்காதவர்களும் கந்தர் சஷ்டி விரதம் இருந்தால் மக்கள் பேறு பெறுவர் என்பதை -'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் ''என்ற பழமொழி விளக்குகின்றது. ''சஷ்டியில் விரதம் இருந்தால் அகம் ஆகிய கருப்பையில் மகப்பேறு வாய்க்கும்'' என்று இப்பழமொழியின் மெய்ப்பொருளை ஞானியார் சுவாமிகள் விளக்கியுள்ளார்கள். கந்தர் சஷ்டி விரதமிருந்தமையால் கண்ணப்பர் ஆகிய திண்ணனாரை பிள்ளையாகப் பெற்றனர் நாகனும் தத்தையும் என்ற வரலாற்றைப் பெரிய புராணத்தில் சேக்கிழாரும் சொல்லியிருக்கக் காண்கிறோம்.

''பொருவரும் சிறப்பின் மிக்கோர்
இவர்க்கினிப் புதல்வர் பேறே
அரியதென் றெவரும் கூற
அதற்படு காதலாலே
முருகலர் அலங்கற் செவ்வேல்
முருகவேள் முன்றிற் சென்று
பரவுதல் செய்து நாளும்
பராய்க்கடன் நெறியில் நிற்பார்''.

இத்தகைய எல்லையற்ற கந்தனின் கருணைத்தன்மையைச் சிறப்பித்தே அவனை ஆன்றோர்கள் கலியுக வரதன் என்று கூறிச் சிறப்பிப்பார்கள். அவனை கலியுக வரதன் என்று கூறுவது ஏற்புடைத்தன்று என்று கூறிய பாம்பன் சுவாமிகள், கிருத, திரேத, துவாபர யுகங்களிலும் கந்தவேளே வரதன்; அவனே இக்கலியுகத்திலும் கூட வரதனாக விளங்குகின்றான் என்று கூறி கந்தனின் பெருமையைப் போற்றி விளக்கியுள்ளார். அத்தகைய கலியுகத்தும் வரதனாகிய கந்தனை வழிபட்டு நாம் அனைவரும் சகல சுகங்களும் பெற்றுச் சிறப்புற வாழ்வோமாக.

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீர் அடியார் எல்லாம்.

# சிவாலயம் வழிபாட்டு முறை



கடவுளிருக்குமிடம் புனிதமானது. அங்கு எல்லாம் சுத்தமாகவும், அழகாகவும் அமைத்து வைக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் மனது இறைவனுடன் ஒன்றுபடும். நாமும் அங்கு போகும் பொழுது சுத்தமாகவும், ஒழுங்காகவும் போய்வர வேண்டும். நன்றாகக் குளித்து விட்டு அவரவருடைய சமயத்திற்குள்ள அடையாளங்களைத் தரித்துக் கொண்டு செல்ல வேண்டும். சைவ சமயத்தார்க்கு விபூதி பூசுதலும், உருத்திராக்கம் தரித்தலும் அடையாளங்களாகக் கொள்ளப்படுகின்றன. இதுபோல் திருமண்காப்பு தரித்துக் கொள்ளுதலும், திருத்துழாய் மணிமாலை அணிந்து கொள்ளுதலும், வைணவ சமயத்தார்க்கு அடையாளங்களாம்.

கோயிலுக்குப் போகும் பொழுது உலக விவகாரங்களிலே மனதைச் செலுத்தாமல் நாம் வழிபடச் செல்லும் பெருமானின் திருநாமங்களை உச்சரித்துக் கொண்டு பயபக்தியோடு செல்லுதல் வேண்டும். நாம் பூண்பதும் காண்பதும் நினைப்பதும் ஒன்றாக இருந்தால்தான் நமக்கு நினைத்த எல்லாம் கைகூடும்.

குழந்தைகளிடத்தும், குருவிடத்தும், பெரியோர்களிடத்தும் நாம் செல்லும்போது வெறுங்கையுடனே போகாது, நம்மாலியன்ற பூ, பழம் முதலியன கொண்டு போவது போல எல்லா வுலகத்தையும், உயிர் வகைகளையும் படைத்துக் காக்கும் பெருமானிடம் நம்மால் இயன்ற பொருள்களை எடுத்துச் சென்று பெருமானுக்குச் சமர்ப்பித்து வணங்குதல் முறையாகும். இன்னும் அபிடேகத்திற்குகந்த இளநீர்-பால்-தயிர்-பழ வகைகள்-பன்னீர் முதலியனவும் வழிபாட்டுக்குச் சிறந்த புட்பங்கள், தேங்காய், சூடம், ஊதுவத்தி, சாம்பிராணி முதலியனவும், தீபமிட எண்ணெய், நெய் முதலியனவும் கொண்டு சென்று செலுத்தி வழிபட வேண்டும்.

முதலில் கோபுர தரிசனம் செய்து கொண்டு பிறகு தலவிநாயகரை தரிசிக்க வேண்டும். நம்முடைய வினைகள் தீரவும், பெருமான் வழிபாடு பூர்த்தியாகவும் பிரார்த்தித்துக்கொண்டு தலையில் குட்டிக் கொண்டும் தோப்புக்கரணங்களிட்டும் விநாயகரை வழிபட வேண்டும். இப்பெருமான் சந்நிதியில் தேங்காய்களை விடல் விடுதல் சிறந்தது. பிறகு கொடி மரத்தடியிற் சென்று வணங்கிக் கொண்டு நந்தியின் பின்புறம் சென்று நந்தியம் பெருமானுடைய கொம்புகளுக்கிடை வழியில் பெருமானைக் கண்டு தரிசிக்க வேண்டும். வலமாக நந்தியின் முன் புறம் சென்று வணங்கி உத்தரவு பெற்று உள் நுழைய வேண்டும். அங்குத் திருவாயிலில் துவார பாலகரிருப்பர். அவர்களை வணங்கிக் கொண்டு உட்புறம் சென்று பெருமான் சந்நிதியை அடைதல் வேண்டும். அங்கு நின்று நமக்குத் தெரிந்த தோத்திரங்களைச் சொல்லி வழிபட்டு நம்முடைய பிரார்த்தனையைச் செலுத்திக் கொள்ள வேண்டும். பிறகு வலமாகச் சுற்றுக் கோயிலிலுள்ள நாயன்மார்கள், தட்சிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர், மகாலக்குமி, நடராசர், நவக்கிரகங்கள் போன்ற மூர்த்தங்களையும் வணங்கிக் கொண்டு மூன்று முறை சுவாமி கோயிலில் வலம் வருதல் முறையாகக் கொள்ளப்படுகிறது. மூன்றாவது சுற்றில் ஈசானத்தில் அமர்ந்திருக்கும் சண்டீசரைத் தரிசித்து வழிபாடுபூர்த்தி அடையும்படி பிரார்த்தித்துக் கொள்ளுதல் வேண்டும். பிறகு அம்பிகையாரது ஆலயத்திற்குச்சென்று அங்கும் சந்நிதியில் நின்று தோத்தரித்து வழிபட்டுக் குறைந்தது இரண்டு முறை வலம் வந்து வெளி வருதல் வேண்டும். மீண்டும் கொடி மரத்தடிக்கு வந்ததும் கீழே விழுந்து வணங்கி அங்கு நின்று சுவாமி தரிசனம் செய்து உத்தரவு பெற்றுக் கொள்ள வேண்டும். உத்தரவு பெற்றுக் கொள்ளு முன் அங்கு அமர்ந்து செபம் முதலியன செய்ய வேண்டும். சுவாமி கோயிலிலுள்ள தென்முகப் பரமாசிரியராகிய தட்சிணாமூர்த்தி சந்நிதியில் அமர்ந்து பஞ்சாட்சரமோ மற்ற மந்திரங்களோ அல்லது தோத்திரங்களையோ உருவிட்டால் மிகுந்த பலன் கிடைக்கும். கொடி மரத்தைத் தாண்டி உள்ளே கீழே விழுந்து வணக்கம் செய்யலாகாது.

---

## வேறு தவம் வேண்டாம்

கண் இருந்தும் குருடனாய் இரு

காது இருந்தும் செவிடனாய் இரு

வாய் இருந்தும் ஊமையாய் இரு


கால் இருந்தும் நொண்டியாய் இரு

சரீரம் இருந்தும் செத்தவனைப் போல் இருந்தால்

வேறு தவம் வேண்டாம்.

—திருவலம் சுவாமிகள்


# அருள்மிகு பார்த்தசாரதித் திருக்குளம்



மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 11.3.87 மற்றும் 27.3.87 தேதிகளில் அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலின் திருக்குளத்தைப் பார்வையிட்டுத் திருக்குளத்தைச் சீரமைக்க உத்திரவிட்ட தற்கிணங்க, ரூ. 14 லட்சத்து 80 ஆயிரம் திட்ட மதிப்பீட்டில் திருக்குளச் சீரமைப்புப் பணி விரைந்து மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றி முடிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



# சூரியனார் கோயில்



வித்துவான் சிவ. முத்துக்குமரவேல்

## 1. சூரியன் வழிபாடு

உலகில் உள்ள நூல்களில் மிகவும் பழையது ரிக்வேதம். இதனை ஆராய்ந்து பார்த்தால் பாரத மக்கள் சூரியனை அக்காலந்தொட்டே வணங்கி வந்தமை விளங்குகின்றது. தமிழில் மிகப்பழைய நூலாகிய தொல்காப்பியத்தில் சூரிய வழிபாடு சொல்லப்பட்டிருக்கிறது. புகார் நகரில் சூரியன் கோவில் இருந்ததைச் சிலப்பதிகாரம் அறிவிக்கிறது.

சூரியன் கண்கண்ட தெய்வம், சிவஜோதி சூரியனிடம் அதிட்டித்து நின்று உயிரினங்கட்கு உபகாரப்படுகின்றது. சூரியனை நாள்தோறும் வழிபடுவதால் கண்பார்வை விளக்கம் அடைகின்றது. சூரியனே உலகில் உள்ள சகல உயிரினங்களுக்கும் ஒளியையும் உணர்வையும் ஊக்கத்தையும் கொடுத்து வாழச் செய்கின்றான். சூரியவெப்பம் இல்லையேல் உயிர்கள் உண்டாவதில்லை. சூரியனுடைய அதிக வெப்பத்தினால் உயிர்கள் அழியும். சூரியன் தன் ஆற்றலினால் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலையும் செய்து உயிரினங்கள் கண்ணால் கண்டு வழிபடத்தக்க கடவுளாக விளங்குகின்றான்.

> ''ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
> காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
> மேரு வலந்திரித லான்''

என்பது சிலப்பதிகாரம்.

## 2. இருப்பிடம்

தமிழகத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடைமருதூர் வட்டத்தில் ஆடுதுறை (தென்குரங்காடுதுறை) என்னும் ஊருக்கு வடக்கே இரண்டு கி.மீ. தூரத்தில் சூரியனார் கோவில் என்னும் நவகிரகத்தலம் அமைந்துள்ளது. திருஞான சம்பந்தராலும் திருநாவுக்கரசராலும் பாடப்பெற்ற திருமங்கலக்குடி என்னும் சிவத்தலத்திற்குக் கிழக்கே அரை கி.மீ. தூரத்தில் இத்தலம் விளங்குகிறது. கும்பகோணத்திலிருந்தும் மயிலாடுதுறையிலிருந்தும் இத்தலத்திற்குச் செல்லப் பேருந்து வசதிகள் உண்டு.

## 3. தலவரலாறு

முன்னொரு காலத்தில் இமயமலையின் வடசார்பில் அறுவகைக் குற்றங்களும் நீங்கிய முனிபுங்கவர்கள் வசித்து வந்தார்கள். அவர்கள் அரன், அரி, அயன் என்னும் மும்மூர்த்திகளையும் வழிபட்டு நான்கு வேதம், ஆறுசாத்திரம், பதினெண் புராணம், இருபத்தெட்டு ஆகமங்கள், அறுபத்து நான்கு கலைகள், தொண்ணூற்றாறு தத்துவங்கள் முதலியவை பற்றி ஆய்ந்துகொண்டிருந்தார்கள்.

அவர்களுள் காலவமுனிவர் என்பவரும்ஒருவர். அவர் முக்காலமும் உணரும் முனிவர். அவர் ஒரு சமயம் தன்னுடைய எதிர்காலப் பலனைச் சோதித்தார். தனக்குக் கூடிய விரைவில் தொழுநோய் ஏற்படப் போவதை உணர்ந்தார்; அதற்காக மனம் வருந்தினார். அவருடன் இருந்த முனிபுங்கவர்கள் தொழுநோய் வராமல் தடுக்கும் உபாயத்தைக் காலவ முனிவருக்குக் கூறினார்கள்.


அவர்கள், 'முனிவரே! சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது ஆகிய நவக்கிரகங்களை நோக்கித் தவம் செய்வீராக! அவர்கள் அருள் செய்தால் தங்களுக்கு ஏற்பட இருக்கும் தொழுநோய் வராமல் நீங்கும்' என்று மொழிந்தார்கள்.

அவர்களின் அறிவுரைப்படியே காலவ முனிவர் இமயமலைச் சாரலில் பஞ்சாக்கினி நடுவில் நின்று நவக்கிரகங்களை நோக்கிக் கடுந்தவம் புரிந்தார். அதன் பயனாய்த் தத்தம் உலகங்களில் உள்ளநவ நாயகர்களிடம் தவ அக்கினியின் சுவாலை வீசியது. அதனை உணர்ந்த சூரிய பகவான் முதலிய நவ நாயகர்களும், ஒரு சேர காலவ முனிவரின் எதிரில் தோன்றினர்; முனிவர்க்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டனர்.

முனிவர் தவநிலையை விடுத்து எழுந்து நவநாயகர்களை வணங்கித் துதித்து 'என்னைத் தொழுநோய் அணுகாமல் இருக்க வரம் தருதல் வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். நவ நாயகர்கள் முனிவர் கேட்டவரத்தை அருளி மறைந்தனர்.

இதனை அறிந்த பிரமதேவர் சினம் கொண்டார். அவர் நவக்கிரகங்களை நோக்கி ''நவகோள்களே! சிவபெருமான் ஆணையின்படிகாலதேவனின் துணையைக் கொண்டு அனைத்து உயிர்கட்கும் பாவபுண்ணியப் பலன்களைக் கொடுக்குமாறு உங்கட்கு கட்டளையிட்டோம். நீங்கள் எம் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் சுதந்தரமாய் முனிவருக்குத் தொழுநோய் அணுகாவண்ணம் வரம் அளித்தீர்கள். ஆகையால் நீங்கள் ஒன்பதின்மரும் பூலோகத்தில் அவதரித்து அம்முனிவருக்கு வரும் தொழுநோயால் நீங்களும் பீடிக்கப்பட்டு உழல்வீர்களாக' என்று சபித்தார்.

சாபம் பெற்ற நவநாயகர்கள் மனம் வருந்திப் பிரமதேவனின் திருவடியைப் பணிந்து தங்களை மன்னித்துச் சாப நீக்கம் அருளும்படிக் கேட்டுக் கொண்டனர். மனம் இரங்கிய பிரமதேவர், 'நவநாயகர்களே! நீங்கள் எம்கட்டளையை மீறி நடந்து இச்சாபம் பெற்றீர்கள்! இது நீங்கவேண்டுமானால் நீங்கள் பூவுலகிற்குச் செல்லுங்கள், தென் பாரதத்தின் காவிரி நதிக்கரையில் உள்ள அர்க்க



**சூரிய பெருமான் உஷா, பிரத்யுஷா தேவிகளுடன்**

(வெள்ளெருக்க) வனத்தை அடையுங்கள்; கார்த்திகை மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை தொடங்கிப் பன்னிரண்டு ஞாயிறுவரை தவம் செய்யுங்கள். அரன், அரி, அயன் என்னும் எங்கள் மூவரையும் நினைத்து உணவின்றி ஒருமனத்தினராய்த் தவம் இயற்றுங்கள். திங்கட்கிழமைதோறும் வைகறைப் பொழுதில் காவிரியில் நீராடித் திருமங்கலக்குடியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானையும் உமாதேவியாரையும் வழிபடுங்கள், உதயாதி ஏழு நாழிகைக்குள் அர்க்க (வெள்ளெருக்க) இலையில் தயிர் அன்னத்தை இட்டுப் புசித்து வாருங்கள். இவ்விரதத்தை முறைபிறழாது செய்யின் உங்கள் சாபம் நீங்கிவிடும். நலம் பெறுவீர்கள்' என்று கூறி மறைந்தார்.

பிரமதேவர் கூறியபடியே நவக்கிரகங்களும் பூலோகத்தில் சோழமண்டலத்தில் காவிரியின் வடகரையில் உள்ள அர்க்க வனத்தை அடைந்து தவம் இயற்றினர். அர்க்கவனம் என்பது வெள்ளெருக்கன் காடு. இப்பொழுது சூரியனார்கோவில் என வழங்கும் இத்தலத்தின் விருட்சம் வெள்ளெருக்காகும்.

நவநாயகர்கள் பிரமனது சாபத்தின் வலிமையால் தொழு நோயால் பீடிக்கப்பட்டு மிகவும் துன்புற்று மும்மூர்த்திகளை நோக்கிக் கடுந்தவத்தை முறையாகச் செய்து வந்தனர். கார்த்திகை மாதம் முதல் ஞாயிறு தொடங்கிப் பன்னிரண்டு ஞாயிறு வரை முன்சொன்னபடி தவம் புரிந்தனர். தவம் நிறைவானபோது மும்மூர்த்திகளும் மகிழ்ந்து நவநாயகர்களுக்கு காட்சி தந்தனர்.


அப்போது சிவபெருமான் நவநாயகர்களை நோக்கி 'நவகோள்களே, உம்முடைய தவத்திற்கு மகிழ்ந்தோம்; உங்களைப் பீடித்திருந்த தொழு நோய் நீங்கிற்று; இன்று முதல் இத்தலம் உங்களுடைய தலமாய் விளங்கும். இத்தலத்திற்கு வந்து பல்வகைத் துன்பங்களையும் பொறுத்துக் கொண்டு உங்களை வழிபடும்பக்தர்களுக்குநீங்களே அனுக்கிரகம் செய்து உங்கள் தொழிலை நடத்துவீர்களாக' என்று வரம் அளித்தார்.

அதனைக் கேட்ட அரியும் அயனும் 'நவக்கிரகங்களுக்கு அனுக்கிரகம் செய்ய வரம் கொடுத்தால் நமக்கு வேலையை இல்லையே' என்று விண்ணப்பித்தனர்.

அவர்கள் விண்ணப்பத்தைச் செவிமடுத்த சிவபெருமான் தம் சூலத்தால் சூரிய புட்கரணிமுதலிய நவதீர்த்தங்களையும் உண்டாக்கினார். ''இந்த அர்க்கவனத்திற்கு - நவக்கிரகத் தலத்திற்கு வந்து சகலதுன்பங்களையும் பொறுத்துக் கொண்டு இந்த நவதீர்த்தங்களில் நீராடி வழிபடும் பக்தர்கட்கு மட்டுமே நவகோள்களின் அனுக்கிரகம் உண்டாகும். சூரியனை முதன்மையாகக் கொண்டு நவகோள்கள் இங்குத் தவம் புரிந்ததால் இத்தலத்தில் நவகோள்களுக்கும் ஆலயம் ஏற்பட்டு சூரியனார்கோவில் என்று வழங்கப்படும்' என்று கூறினார்.

அதைக் கேள்வியுற்ற அரியும் அயனும் மனம் மகிழ்ந்தனர். அனைவரும் நவநாயகர்களை ஆசீர்வதித்து மறைந்தனர்.

ஆலயத்தின் எதிரில் உள்ள சூரியபுட்கரணி உட்பட ஒன்பது தீர்த்தங்கள் தற்பொழுதும் உள்ளன.



நவகிரக விமானங்கள்

## 4. நவநாயகரின் பெருமை

சூரியன் : காசிப முனிவரின புத்திரர், ஒளிப் பிழம்பானவர், நவக்கிரகங்களில் முதன்மை பெற்றவர்.

| | |
|---|---|
| ராசி : | சிம்மராசிக்கதிபதி |
| திக்கு: | நவக்கிரகங்களுக்கு நடு |
| அதிதேவதை : | அக்கினி |
| பிரத்யதிதேவதை: | உருத்திரன் |
| தலம் : | சூரியனார்கோயில் |
| நிறம் : | சிவப்பு |
| வாகனம் : | ஏழு குதிரைகள் பூட்டிய ரதம் |
| தானியம் : | கோதுமை |
| மலர்: | செந்தாமரை, எருக்கு |
| வஸ்திரம் : | சிவப்புக்கரை ஆடை |
| ரத்தினம் : | மாணிக்கம் |
| அன்னம் : | கோதுமை, ரவா, சர்க்கரைப் பொங்கல். |

சந்திரன் : பாற்கடலில் தோன்றியவர். தண்ணொளியுடையவர். வளர்பிறையில் சுபராகவும், தேய்பிறையில் பாபராகவும் விளங்குபவர்.

| | |
|---|---|
| ராசி : | கடகராசிக்கு அதிபதி |
| திக்கு : | தென்கிழக்கு |
| அதிதேவதை : | நீர் |
| பிரத்யதிதேவதை: | கௌரி |
| தலம் : | திருப்பதி |
| நிறம் : | வெள்ளை |
| வாகனம் : | வெள்ளைக் குதிரை |
| தானியம் : | நெல் (பச்சரிசி) |
| மலர் : | வெள்ளை அரளி, வெள்ளல்லி |
| வஸ்திரம் : | வெள்ளையாடை |
| ரத்தினம் : | முத்து |
| அன்னம் : | தயிர் அன்னம் |

அங்காரகன் : இவர் வீரபத்திரர் அம்சம். தெய்வம் சுப்ரமணியர், பாவ பலனைக் கொடுக்கும் குரூரர்.

| | |
|---|---|
| ராசி : | மேஷ, விருச்சிகராசிகளுக்கு அதிபதி |
| திக்கு : | தெற்கு |
| அதிதேவதை : | நிலமகள் |
| பிரத்யதிதேவதை: | சேத்திர பாலகன் |
| தலம்: | வைத்தீஸ்வரன்கோயில் |
| நிறம்: | சிவப்பு |
| வாகனம் : | ஆட்டுக்கிடா |
| தானியம் : | துவரை |
| மலர்: | சண்பகம், சிவப்பு அரளி |
| வஸ்திரம் : | சிவப்பு ஆடை |
| ரத்தினம் : | பவழம் |
| அன்னம் : | துவரம்பருப்புப் பொடிசாதம் (காரம்) |

புதன் : இவர் சந்திரனுடைய குமாரர், தீய கிரகங்கள் விளைவிக்கும் பீடைகளை அழிக்கும் ஆற்றல் உடையவர்.

| | |
|---|---|
| ராசி : | மிதுன, கன்னி ராசிகளுக்கு அதிபதி |
| திக்கு : | வடகிழக்கு |
| அதிதேவதை : | விஷ்ணு |
| பிரத்யதிதேவதை: | நாராயணன் |
| தலம் : | மதுரை |
| நிறம் : | வெளிர் பச்சை |
| வாகனம் : | குதிரை |
| தானியம் : | பச்சைப் பயறு |
| மலர் : | வெண்காந்தள் |
| வஸ்திரம் : | பசுமையாடை |
| ரத்தினம் : | மரகதம் |
| அன்னம் : | பாசிப்பருப்புப்பொடி சாதம் (காரம்) |

குரு : இவர் தேவகுரு. இவருடைய பார்வையால் தோஷங்கள் அனைத்தும் நீங்கும். பூர்ணசுபர்.

| | |
|---|---|
| ராசி : | தனுசு, மீனராசிகளுக்கதிபதி |
| திக்கு : | வடக்கு |
| அதிதேவதை : | பிரமன் |
| பிரத்யதிதேவதை: | இந்திரன் |
| தலம் : | திருச்செந்தூர் |
| நிறம் : | மஞ்சள் |
| வாகனம் : | மீனம் |
| தானியம் : | கடலை |
| வஸ்திரம் : | மஞ்சள் நிற ஆடை |
| ரத்தினம் : | புட்பராகம் |
| அன்னம் : | கடலைப்பொடி சாதம் (காரம்) |

சுக்கிரன் : இவர் அசுரகுரு. இவரை மழைக் கோள் என்று அழைப்பர். சுபர்.

| | |
|---|---|
| ராசி : | ரிஷபம், துலாம் ராசிகளுக்கதிபதி |
| திக்கு : | கிழக்கு |
| அதிதேவதை : | இந்திராணி |
| பிரத்யதிதேவதை: | இந்திரமருத்துவன் |
| தலம் : | ஸ்ரீரங்கம் |
| நிறம் : | வெள்ளை |
| வாகனம் : | முதலை |
| தானியம் : | மொச்சை |
| மலர் : | வெண்தாமரை |
| வஸ்திரம் : | வெள்ளையாடை |
| ரத்தினம் : | வைரம் |
| அன்னம் : | மொச்சைப்பொடி சாதம் |

சனி : இவர் சூரியனுடைய குமாரர்; பாவ பலன் தருவதில் ஈஸ்வர பட்டம் பெற்றவர்.

| | |
|---|---|
| ராசி : | மகர, கும்பராசிகளுக்கதிபதி |
| திக்கு : | மேற்கு |
| அதிதேவதை : | இயமன் |
| பிரத்யதிதேவதை: | பிரஜாபதி |
| தலம் : | திருநள்ளாறு |
| நிறம் : | கருமை |
| வாகனம் : | காகம் |
| தானியம் : | எள்ளு |
| மலர் : | கருங்குவளை, வன்னி |
| வஸ்திரம் : | கருப்பு நிற ஆடை |
| ரத்தினம் : | நீலம் |
| அன்னம் : | எள்ளுப்பொடி சாதம்(காரம்) |
| தீபம் : | எள்ளு முடிச்சு தீபம் |

ராகு : அசுரத்தலையும் நாகவுடலும் உடையவர். மிக்க வீரம் உடையவர், கருநாகம் என்று அழைக்கப்படுபவர்.

| | |
|---|---|
| திக்கு : | தென்மேற்கு |
| அதிதேவதை : | பசு |
| பிரத்யதிதேவதை: | பாம்பு |
| தலம் : | காளத்தி |
| நிறம் : | கருமை |
| வாகனம் : | நீலசிம்மம் |
| தானியம் : | உளுந்து |
| மலர் : | மந்தாரை |
| வஸ்திரம் : | கருப்புநிறஆடை |
| ரத்தினம் : | கோமேதகம் |
| அன்னம் : | உளுத்தம் பருப்புப்பொடி சாதம் (காரம்) |

கேது : இவர் நாகத்தலையும் அசுர உடலும் உடையவர். சிகி என்றும், செந்நாகம் என்றும் அழைக்கப்படுவர்.

| | |
|---|---|
| திக்கு : | வடமேற்கு |
| அதிதேவதை : | சித்திரகுப்தன் |
| பிரத்யதிதேவதை: | பிரமன் |
| தலம் : | காளத்தி |
| நிறம் : | செம்மை |
| வாகனம் : | கழுகு |
| தானியம் : | கொள்ளு |
| மலர் : | செவ்வல்லி |
| வஸ்திரம் : | பலநிறஆடை |
| ரத்தினம் : | வைடூரியம் |
| அன்னம் : | கொள்ளுப்பொடி சாதம் |

## 5. கோவில் கட்டப்பட்ட வரலாறு

கி.பி. 1079 முதல் கி.பி. 1120 வரை சோழ மண்டலத்தை ஆண்ட முதல் குலோத்துங்கன் இவ்வாலயத்தைக் கட்டினான் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அவன் காலத்திய கல்வெட்டுக்கள் இரண்டு இவ்வாலயத்தின் கருவறை வெளிச்சுவர்களில் காணப்படுகின்றன.

## 6. வழிபட்டுப் பேறு பெற்றோர்

இத்தலத்திற்கு வந்து தங்கியிருந்து சூரிய பகவானைப் பரிட்சித்து மகாராஜா, சந்திரபகவானைச் சித்ராங்கத பாண்டியன், அங்காரக பகவானைப் புரூரவசு, புதபகவானை சோமசன்மன், குருபகவானை இந்திரன், சுக்கிரபகவானைத் தூமகேது, சனீஸ்வரனை நளமகாராஜா ஆகியோர் முறையாக வழிபட்டுத் தோஷங்கள் நீங்கப்பெற்றனர் என்று தலபுராணம் கூறுகின்றது.

## 7. ஆலய அமைப்பும், வழிபாட்டு முறையும்

இத்தலத்தில் ஸ்ரீ சூரியன் ஆலயம் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. ஆலயத்தின் நுழைவாயிலுக்கருகில் சூரிய புட்கரணி என்னும் திருக்குளம் அமைந்துள்ளது.

இவ்வாலயம் இராஜகோபுரமும் ஒரு சுற்றும் கொண்டது. ஸ்ரீ சூரியன் உஷா, பிரத்யுஷா (சாயா) தேவிகளுடன் எழுந்தருளியிருக்கின்ற கருவறை, அர்த்த மண்டபம், குரு மண்டபம், ஸ்தபன மண்டபம், சபாநாயகர் மண்டபம், நர்த்தன மண்டபம், கோள் தீர்த்த விநாயகர் கோவில், சனீஸ்வரன் கோவில், புதன் கோவில், அங்காரகன் கோவில், சந்திரன் கோவில், கேது கோவில், சுக்கிரன் கோவில், ராகு கோவில், தேஜஸ் சண்டீசர்கோவில் ஆழ்கிணறு, குதிரை வாகன மண்டபம், பலிபீடம், கொடிமர பீடம் முதலியன இக்கோயிலில் அமைந்துள்ளன.

இவ்வாலயத்தில் நவநாயகர்கள் வாகனமும் ஆயுதமும் இன்றி இரண்டு கரங்களுடன் அமைதியான அல்லது புன்னகை தவழும் முகத்துடன் அனுக்கிரக மூர்த்திகளாகக் காட்சி தருகின்றனர்.

கோபுர தரிசனம் செய்து இவ்வாலயத்தில் நுழைந்ததும், முதலில் கோள்தீர்த்த விநாயகரையும் அடுத்து விசுவநாதர் விசாலாட்சி தாயாரையும் வழிபட வேண்டும். பின்பு ஸ்ரீ சூரியனுடன் உஷா, பிரத்யுஷா தேவிகளையும் எதிரில் காட்சிதரும் குருபகவானையும் வழிபட வேண்டும். அடுத்து தென்சுற்றில் கீழே இறங்கிச் சனீஸ்வரன், புதன், அங்காரகன், சந்திரன், கேது, சுக்கிரன், ராகு, தேஜஸ்சண்டீசர் முதலிய சுற்றுக்கோவில்களுக்குச் சென்று வழிபட வேண்டும். பிறகு சென்றவழியே திரும்பிக் கோள்தீர்த்த விநாயகரிடம் வந்து குறை




மயிலை பக்த ஜன சபையின் சார்பில் 24 நாதசுரக் கலைஞர்கள் மழை வேண்டி நடத்திய கூட்டு இசை வழிபாடு மயிலாப்பூர் காரணீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்றது. நம் அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர் திரு சுகவனேஸ்வரர், ஐ.ஏ.எஸ்., தலைமையேற்ற இவ்விழாவில் மாண்புமிகு நீதிபதி சுவாமிக்கண்ணு, ஆணையாளர் திரு. தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ். துணை ஆணையர் திரு. ந. சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

களைச் சொல்லி வேண்டிக்கொண்டு கொடி மரத்தின் பீடந்தொட்டு ஒன்பது சுற்றுக்கள் வலமாக வந்து பீடத்தின் முன்பு ஆடவர்கள், அட்டாங்கமாகவும், மகளிர் பஞ்சாங்கமாகவும் வடக்குப் பக்கம் தலைவைத்து வணக்கம் செய்ய வேண்டும்.

கோபுர வாயிலைக் கடந்து வெளியே செல்லும்போது அங்கு அமர்ந்திருக்கும் சாதுக்களுக்குத் தருமம் செய்தல் வேண்டும்.

## 8. தோஷ நிவர்த்தி

ஏழரையாண்டுச் சனி, அட்டமத்துச்சனி, ஜென்மச்சனியுள்ளவர்களும் நவக்கிரக தோஷம் உடையவர்களும் இத்தலத்திற்கு வந்து தலவாசம் செய்து உபவாசம் இருந்து நவதீர்த்தங்களில் நீராடித் திருமங்கலக்குடி பிராண நாதரையும், மங்களாம்பிகையையும், நவகோள்களையும் முறைப்படி வழிபாடு செய்யின் தோஷங்கள் நீங்கப்பெறுவர் என்பது உறுதி.

களத்திர தோஷம், விவாகப் பிரதிபந்த தோஷம், புத்திரதோஷம், புத்திரப்பிரதிபந்த தோஷம், வித்தியாப் பிரதிபந்த தோஷம், உத்தியோகப் பிரதிபந்த தோஷம் உடையவர்களும் சூரியதிசை சூரியபுத்தி யுடையவர்களும் இத்தலத்திற்கு வந்து வழிபட்டால் தோஷம் நீங்கும். அனுக்கிரகம் உண்டாகும்.

## 9. திருமங்கலக்குடி

நவக்கிரக தோஷ நிவர்த்திக்காக இவ்வாலயத்திற்கு வருகின்றவர்கள் இவ்வாலய வழிபாட்டிற்கு முன்போ அல்லது பின்போ இங்கிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் மேற்கே உள்ள திருமங்கலக்குடி புராண வரதீஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று வழிபாடு செய்தல் நலம் தரும்.

புராணவரதீஸ்வரரையும் (பிராணநாதர்) மங்கள நாயகியையும் வழிபட்டால் நவக்கிரக தோஷங்கள் நீங்கும் என்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

''வேள்ப டுத்திடு கண்ணினன் மேருவில் லாகவே
வாள ரக்கர் புரமெரித் தான்மங்க லக்குடி
ஆளும் ஆதிப்பி ரானடி கள்அடைந் தேத்தவே
கோளும் நாளவை போயறும் குற்றமில்
லார்களே''

திருமங்கலக்குடியில் எழுந்தருளியிருக்கின்ற புராண வரதீஸ்வரரை வழிபட்டால் நவகோள்களால் உண்டாகும் தோஷங்களும் இருபானேழ் நட்சத்திரங்களால் உண்டாகும் தீமைகளும் நீங்கி நன்மை உண்டாகும் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

அகத்தியர், காளி, விட்டுணு முதலியவர்கள் இத்தலத்தில் வழிபாடு செய்திருக்கிறார்கள்.

# வேற்காடு உறையும் வேதபுரீஸ்வரர்





சு. சண்முகம், கணக்கு அலுவலர், அறநிலையத்துறை, சென்னை.

''மேலைவானவரும் அறியாததோர்
கோலமேயெனை ஆட்கொண்ட கூத்தனே
ஞாலமே விசும்பே இவை வந்துபோம்
காலமே உனை என்றுகொல் காண்பதே''
என்றும்

''குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க்குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்
தென்
மனத்திடை மன்னிய மன்னே''.

என்றும், தன் தேனூறும் திருவாசகத்தில் எம்பெருமான் புகழினை மணிவாசகர் இயம்புகிறார். இப்படி புகழப்பட்ட இறைவனை இறைவியுடன் திருமணக் கோலத்தில் காணும் பேறு பெற்றவர் தமிழ் முனிவர் அகத்தியர். இக்காட்சி அவருக்கு வேற்காடு வேத புரீஸ்வரர் ஆலயத்தில் கிடைத்ததாக தல புராணம் கூறுகிறது. இத்தலம் திருவேற்காடு எனத் தொண்டை நன்னாட்டில் பேர் பெற்று வழங்கி வருகிறது. அன்னை தேவி கருமாரியின் திருவருள் வேண்டி மக்கள் அணி அணியாய் சென்று வரும் சென்னை மாநகர் அருகில் உள்ள இடம். இப்பதி இன்றைக்கு 1300 ஆண்டுகட்கு முன்னமே நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞான சம்பந்தரால் பதிகம் பாடப்பெற்றது. அப்பெருமாள் காளத்திநாதரைச் தரிசித்துப் பின் திருவொற்றியூர் செல்லும் முன்பு திருவேற்காடு வந்து அருள்மிகு பாலாம்பிகையுடன் காட்சி தரும் அருள்மிகு வேதபுரீஸ்வரரை பதிகம் பாடி போற்றியிருக்கிறார்.

அப்பதிகத்திலுள்ள பதினொரு பாடல்கள் திருவேற்காடு தலத்தினையும் அருள்மிகு வேதபுரீஸ்வரரையும் சென்று தரிசித்து வணங்கும் அடியார்கள் பெறக் கூடிய பல நலன்களை தெளிவுற விளக்குகிறது. அவற்றில் சொல்நயமும், பொருள்வளமும் செறிந்து இறைவன்தன் மாறாத பெருமையினையும் அவனை நினைத்தும் சென்றும் வணங்குபவர்கள் பெறக்கூடிய நற்பலன்கள் நிறைந்து காணப்படுகிறது.

அண்மையில் வேற்காடு குடமுழுக்கு விழாவிற்குச் சென்று அருள்மிகு வேதபுரீஸ்வரரையும் அன்னை கருமாரியையும் தரிசித்துப் பேரருள் பெற்ற அன்பர்கள் ஞானசம்பந்தப் பெருந்தகையின் வேற்காட்டுப் பதிகப் பாடல்களையும் அவற்றின் பொருளையும் படித்து இன்புறுதல் சாலச் சிறந்தது. அவற்றினை ஈண்டு நோக்குவோம்.

திருச்சிற்றம்பலம்

ஒள்ளிது உள்ள கதிக்காம் இவன் ஒளி
வெள்ளியான் உறை வேற்காடு
உள்ளியார் உயர்ந்தார் இவ்வுலகில்
தெள்ளியார் அவர் தேவரே.

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற வாக்கின்படி உயர்ந்தவற்றை எண்ணுபவர்க்கு நல்லகதியுண்டு. ஒளிமயமாக விளங்கும் இறைவன் உறையும் திருவேற்காட்டினை நினைப்பவர் இவ்வுலகில் தெளிவு பெறுவர், தேவரென போற்றப்படுவர்.

மேற்கண்ட முதல் பாடல் வேற்காட்டினை நினைப்பவர்கள் பற்றியது. இரண்டாவது பாடிப் பணிபவர்களைப் பற்றியது.

ஆடல் நாகம் இசைத்து அளவில்லதோர்
வேடங்கொண்டவன் வேற்காடு
பாடியும் பணிந்தார் இவ்வுலகினில்
சேடராகிய செல்வரே.

அடியவர்கட்கு பல உருவில் அருள்புரிந்தவரும் நாகத்தை அணிந்தவருமான இறைவனைப் பாடிப் பணிந்தவர்கள் பெருமையும் செல்வமும் உடையவராவார்கள்.

அடுத்து இறைவனுக்கு ஏதும் அளித்தவர்கட்கு கிட்டும் பலன் பற்றி சொல்வது:

பூதம் பாடப் புறங்காட்டிடை ஆடி
வேத வித்தகன் வேற்காடு
போதும், சாந்தும், புகையும் கொடுத்தவர்க்கு
ஏதம் எய்துதல் இல்லையே.

வேற்காட்டு ஈசனுக்கு மலர்களும், சந்தனமும், சாம்பிராணிப் புகையும் அளித்தவர்கட்கு துன்பம் என்பது இல்லை என்கிறார்.

ஆழ்கடலென கங்கை கரந்தவன்
வீழ்சடையினன் வேற்காடு
தாழ்வுடை மனத்தால் பணிந்து ஏத்திடப்
பாழ்படும் அவர் பாவமே.

கடல் போன்ற கங்கையை சடையில் தரித்த வேற்காடு இறைவனை பணிவுடைய மனத்துடன் போற்றி வணங்குபவர்களது பாவம் அழிந்துவிடும்.

காட்டினாலும் அயர்த்திடக் காலனை
வீட்டினான் உறை வேற்காடு
பாட்டினால் பணிந்தேத்திட வல்லவர்
ஓட்டினார் வினை ஒல்லையே.

தானே மும்மூர்த்திகட்கும் முதல்வன் எனக் காட்டினாலும் நல் உணர்வு பெறாத காலனை அழித்தவன் உறையும் வேற்காட்டைப் பாடிப் பரவி ஏத்திட வல்லவர்களின் தீவினைகள் விரைவில் ஓடிவிடும் என்கிறார்.

தோலினால் உடைமேவ வல்லான் சுடர்
வேலினன் உறை வேற்காடு
நூலினால் பணிந்தேத்திட வல்லவர்
மாலினார் வினை மாயுமே.

புலித்தோலாடை அணிந்தவனும், சுடர் வேலினை உடையவனுமான சிவபெருமான் உறையும் வேற்காட்டின் புகழைப் பாடிப் பணிந்தேத்துபவர்களின் வினைகள் மாய்ந்து போகும்.

மல்லல் மும்மதில் மாய்தர எய்ததோர்
வில்லினான் உறை வேற்காடு
சொல்ல வல்ல சுருங்கா மனத்தவர்
செல்ல வல்லவர் தீர்க்கமே.

மூவெயில் எய்த மேருவில்லினை உடைய எம்பெருமான் உறையும் வேற்காட்டைப் புகழ்ந்து நல்ல சொற்களை சொல்ல வல்லவர் நல்ல கதிக்கு செல்ல வல்லமை பொருந்தியவர்கள் ஆவார்கள் என்பது தீர்க்கம் என்கிறார்.

மூரல் வெண் மதி சூடு முடியுடை
வீரன் மேவிய வேற்காடு
வாரமாய் வழிபாடு நினைந்தவர்
சேர்வர் செய்கழல் திண்ணமே

இளவெண்மதியினை சூடிய வீரம் பொருந்திய பெருமான் வாழும் வேற்காட்டினை வாரந்தோறும் சென்று வழிபடும் அன்பர்கள் இறைவனது சிறப்பான கழலடியினை சேருவது திண்ணம். பாவச் செயல்களின் பலன் நீங்கி வீடு பெறுவர்.

பரக்கினார் படுவெண் தலையின் பலி
விரக்கினான் உறை வேற்காடு
அரக்கன் ஆண்மை அடரப்பட்டான் இறை
நெருக்கினான் நினைமினே


அவனது அடியும் முடியும் காணப்பெறாது அலைந்த பிரம்மா விஷ்ணு தலைகளில் பலி ஏற்பவன். அன்று ராவணனின் வலிவினை அடக்கி ஆண்ட பெருந்தகை என்பவற்றை நினைவு கூருங்கள் என வேற்காட்டு வேந்தனின் பெருமைகள் சொல்லப்படுகின்றன.

மாறிலா மலரானொடு மாலவன்
வேறலான் உறை வேற்காடு
ஈறிலா மொழியே மொழியாம் எழில்
கூறினோர்க்கு இல்லை குற்றமே.

திருமால், பிரம்மா உட்பட எப்பொருளுக்கும் வேறாக இல்லாதவனான வேற்காட்டு இறைவனைப் புகழ்ந்து சொல்லும் மொழிகளே உண்மை மொழிகள். அவன் புகழ் கூறியவர்கள் குற்றம் நீங்கி குணம் பெறுவர்.

விண்ட மாம் பொழில் சூழ் திருவேற்காடு
கண்டு நம்பன் கழல் பேணிச்
சண்பை ஞானசம்பந்தன் செந்தமிழ்
கொண்டு பாடக்குணமாமே.

மலர்ந்த மலர்களை உடைய மாமரங்களால் சூழப்பட்ட திருவேற்காட்டிறைவனை சண்பை (சீர்காழியின் பன்னிரு பெயர்களில் ஒன்று) ஊரிலிருந்து வந்த ஞானசம்பந்தனின் இந்தச் செந்தமிழ் பாடல்களால் பாடித் துதிக்க நன்மைகள் பெருகும் என முத்தாய்ப்பு வைத்துள்ளார்.



# பங்கமில் குணத்தான் பரதன்

புலவர் திலகம் கீரன்

இராமாயணக் காப்பியத்தில் வரும் பாத்திரங்களில் உயர்ந்த பண்புடைய ஒரு பாத்திரம் பரதன். அதனால் அப்பாத்திரத்தைக் குறிப்பிடும் கம்பன் 'பங்கம் இல் குணத்தான்' என்று குறிப்பிடுகிறான். இத்தொடரின் பொருள் 'குற்றமே சாராத குணத்தை யுடையவன்' என்பதாகும். காவிய நாயகன் இராமன் மூலமாகவே கம்பன் பரதனை, 'பங்கமில்குணத்து எம்பி பரதன்' எனக் கூற வைக்கிறான்.

விசுவாமித்திரன் வழியாகப் பரதனுக்குக் கம்பன் தரும் மற்றொரு அடைமொழி அப்பாத்திரத்தின் மிகப் பெரிய பண்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. உலகில் நதிகள் எங்கே தோன்றினாலும் அவை அனைத்தும் வந்து சங்கமிப்பது ஒரு கடலிலேயேயாகும். உலகில் அமைந்த நீதிகள் அனைத்தையும் ஆறுகளாக உருவகிப் போமானால் அந்த நீதிகள் அனைத்தும் வந்து சங்கமிக்கும் கடலாக இருப்பவன் பரதன் என்று குறிப்பிடப் பெறுகிறான். அதாவது பரதன் ஒரு நீதிக் கடல் என்பதையே விசுவாமித்திரன்,

''தள்ளரிய பெருநீதி தனி ஆறு புகமண்டும்
பள்ளம்....''

என்று குறிப்பிடுகிறான்.

பங்கமில் குணத்தானாக—நீதிக்கடலாக—உயர்த்திக்கூறப் பெறும் பரதன் பாத்திரத்தை ஒரு புதிய கண்ணோட்டத்தில் காண்பதே இக் கட்டுரையின் நோக்கம். கம்பன் படைத்துக் காட்டும் பரதன், ஒரு புது அணுகு முறையில் காணத் தக்க வகையில் அமைந்துள்ளது.

பரதன் என்ற பாத்திரத்தைக்கொண்டு என்ன புதிய கண்ணோட்டத்தைக் கம்பன் காட்ட முற்படுகின்றான்?

**தனிமனித வழிபாடும் விளைவும்**

இராமாயணக் காவிய நாயகன் இராமனுக்கு அமைந்த பெயர் வரதன், அவன் இளவலுக்கு அமைந்த பெயர் பரதன். வரதன் என்னும் இராமனுக்கு அமைந்த உயர் குணங்கள் அனைத்தையும் பெற்றவன் பரதன். இராமன் குணத்தில் எள்ளளவும் எவ்வளவும் குறைந்தவனல்லன் பரதன். வரதன் பரதன் என்ற இரு பாத்திரங்களையும் அவர்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்ற வகையிலும், அவ்விருவர் அரச வாழ்க்கையுடன் தொடர்புடையவர்கள் என்ற வகையிலும் ஆறுபேர் சூழ்ந்துள்ளனர். அவ்வறுவர் பரதன் தாய் கைகேயி, இருவருக்குத் தந்தை தயரதன், இருவருக்கும் சகோதரன் இலக்குவன், வரதன் தாய் கோசலை, குல குரு வசிட்டர், வேடுவர் தலைவன் குகன் என் போராவர். இவ்வறுவரும் வரதனையும் பரதனையும் சூழ்ந்து நின்ற பாத்திரங்கள்.

இவ்வறுவரும் வரதன் பரதன் என்ற இருவரையும் சூழ்ந்து நிற்பினும் வரதன் என்றஇராமன் மேல் வைத்த எல்லையற்ற பற்று காரணமாக அவ்வரதனைப் போலவே உயர் குணம்கொண்ட பரதனைப் புரிந்து கொள்ளாமல் போயினர்.

தனிமனித வழிபாடு (Hero worship) என்ற ஒரு தொடரை நாம் அடிக்கடி கேள்விப் படுகிறோம். நம் உள்ளம் விரும்பும் ஒருவரை அவர் அரசியலுக்கோ அல்லது ஒரு அமைப்புக்கோ



அல்லது ஒரு குடும்பத்திற்கோ கூடத் தலைவராக இருக்கலாம். புகழ்ந்து கொண்டே போவது மனிதர்களுக்கு வழக்கம். அவ்வாறு ஒரு தனிமனிதரைப் புகழ்ந்து கொண்டே போவதையே 'தனிமனித வழிபாடு' என்று சொல்கிறோம். பற்று காரணமாக இவரின்றி எதுவும் நடவாது; இவருக்கு நிகரானோர் யாருமில்லை, இவர்தான் நம்மைக் காக்கும் கடவுள்' என்றெல்லாம் ஒரு தனிமனிதரைப் புகழ்ந்து கொண்டே போவது நம் பழக்கம். அதில் தவறு எதுவுமில்லை. ஆனால் தனிமனித வழிபாட்டின் அடிப்படையில் ஒருவரைப் புகழ்ந்து கொண்டே போகிறபோது யாரை நாம் புகழ்ந்து கொண்டே போகிறோமோ, அவரைப் போலவே உயர் குணம் கொண்டு, அவருக்குப் பக்கத்திலே இருக்கும் இன்னொரு பண்பாளரை, நல்லவரை அடையாளந் தெரிந்து கொள்ள முடியாத குற்றமும் நிகழ வாய்ப்புள்ளது. இது தனிமனித வழிபாட்டினால் நேரும் குற்றமாகும். வரதன், பரதன் என்ற இருவரில் வரதன் என்ற இராமன் மேல் கைகேயி, தயரதன், இலக்குவன், கோசலை, குலகுரு வசிட்டன், குகன் ஆகியோர் வைத்து விட்டஎல்லையற்ற பற்றால் - தனிமனித வழிபாட்டால் அவ்வரதனுக்கு ஒரு எள்ளளவும் குறையாத பரதனை புரிந்து கொள்ளாமல் போயினர் என்பதுடன் பழியும் கூறினர் என்று கம்பன் காட்டுவதே புதிய கண்ணோட்டமாகும்.

வரதனையும், பரதனையும் நெருக்கமாகச் சூழ்ந்திருக்கும் இவ்வறுவரும் வரதன் மேல் கொண்ட எல்லையற்ற பற்றால் பரதனைப் புரிந்து கொள்ளாமல் போயினர் எனக் காட்டும் கம்பன், ஒரு பக்கம் மட்டுமே அன்பு கொள்ளாது இருவர் மீதும் அன்பு கொண்டோர் எங்ஙனம் இருவரையும் புரிந்து கொண்டனர் என்றும் காட்டுகிறான். அங்ஙனம் புரிந்து கொண்டோர் குகனின் வேடுவர்களே எனவும் காட்டுகிறான்.

**கைகேயி**

முதலில் பரதன் என்ற பாத்திரத்தை அவன் தாயாகிய கைகேயி உணர்ந்து கொண்டாளா? என்பதை ஆராய்வோம். ஏனெனில் மகனுக்குத் தாயாக விளங்குபவள் தன் மகனின் பண்பு நலன்களை நன்கு உணர்ந்தவளாக இருக்கவேண்டும். அதுவே இயற்கை. 'தாய்க்கு ஒளித்த சூலில்லை' என்பது கருவிலே கிடக்கும்போது மட்டுமே பொருளுடைய பழமொழி அன்று; கரு உருப்பெற்று வளர்ந்த பின்னும் அப்பழமொழிக்குப் பொருள் உண்டு. ஆனால் கைகேயி தன் மகன் பரதன் குணத்தை அறிந்தனளா?

இராமாயணத்தில் தூமொழி மடமானாக விளங்கும் கைகேயியைத் தீயவை யாவினும் சிறந்த தீயாளாக மாற்றுவது மந்தரை என்ற கூனியே.



உள்ளம் திரிபுபடாத உயர்ந்த நிலையில் நிற்கும் கைகேயி தூய மொழிமடமான்; உள்ளம் திரிந்த கொடிய நிலைக்குச் சென்றுவிட்ட கைகேயி, தீயவை யாவையினும் சிறந்த தீயாள்.

உயர்ந்த உள்ளம் படைத்த கைகேயியைக் கணவனுக்கு எதிராகவும் இராமனுக்கு எதிராக வும் மாற்றுவது, அவ்வளவு எளிதான செயலன்று என்பது எல்லாரையும் விடக் கூனிக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அவள், கைகேயி உள்ளத்தை மாற்றுவதற்குப் பரதன் ஆட்சிபெற வேண்டும் என்ற கருத்தையே உந்தும் ஆர்வ மிக்க கருத்தாக அடிக்கடி கூறுகிறாள். 'உன் வயிற்றில் பிறந்த பரதன் வாழ்வு வீணாகிவிடும்' என்ற எண்ணத்தை பெரிதுபடுத்தித் தனக்கே உரிய வஞ்சகக்குழைவும் சொல்லாற்றலும் இணைய எடுத்துரைக்கிறாள்.

'கைகேயி! சிவந்தவாய்ச் சீதையும் கரிய செம்மல் இராமனும் நிவந்த ஆசனத்து வீற்றிருக்க உன் மகன் அவந்தனாய் (அனாதையாக) வெறு நிலத்துக்கிடப்பன்.''

''பிறந்திலன் பரதன் நீ பெற்றதால்.''

''பரதன் மண்ணுறு முரசுடை மன்னர் மாலை யில் எண்ணுறப் பிறந்திலன்; இறத்தல் நல்லது''.

''கல்வியும், இளமையும், கணக்கில் ஆற்றலும் வில்வினை உரிமையும், அழகும், வீரமும், எல்லை யில் குணங்களும் பரதனுக்கு உள்ளன. எனினும் அவை தரையில் ஊற்றிய அமுதமாகி விட்டனவே''

-மேற்குறித்த வகையில் கூனி, உள்ளத்தில் பிள்ளைப்பாசத்தை அச்சாக்கியே தன் வஞ்சகச் சக்கரத்தைச் சுற்ற விடுகிறாள்.

ஆனால் கூனியின் சொற் கேட்டுக் கைகேயி உடனே உள்ளம் மாறிவிடவில்லை. 'நீ செய்யும் செயல் எனக்கும் நல்லதல்ல, என் மகன் பரதன் தனக்கும் நல்லதல்ல'' என்று கூடப் பேசுகிறாள்.

ஆனால் தன் மகன் பரதனுக்குக் கூனியின் சொற்கள் தீமையே விளைவிக்கும் என்பதைக் கைகேயி உறுதியாக உணர்ந்தாளா?

தன் மகன் பரதனின் தூய உள்ளத்தை-முறைமையிலிருந்து ஒரு சிறிதும் மாறாத உயர் பண்புடையவன் பரதன் என்ற அவன் குணத்தைக்-கைகேயி உறுதியாக உணர்ந்திருந்தால் கூனியின் சொற்களுக்குச் செவிசாய்த்திருக்க மாட்டாள், அது மட்டுமன்று, சுடுமயானத்திடையே தன்துணை யேக, தோன்றலாகிய பரதன் துயர்க் கடலில் ஏக, கடுமை ஆர் கானகத்துக் கருணையார் காகுத்தன் ஏகக் கொடுமைகளைப் புரிந்திருக்க மாட்டாள்.

உலகியலில் பொதுவாக ஒரு தாய் தன் மகனுடைய 'வாய்க்குப் பிடித்தது இது' என்று தெரிந்து வைத்திருக்கிறாள்; ஆனால் மக னுடைய 'வாழ்வுக்குப் பிடித்தது இது' என்பதைத் தெரிந்து வைத்துக் கொள்வதில்லை.

பரதன், வழியுடைத்தாய்வரும் மரபை மாய்த்து, ஒரு பழியுடைத்து என ஆக்கக் கூடாது என்ற உள்ளம் படைத்தவன் என்பதைக் கைகேயி உணர்ந்திருந்தால் அவள் சுழியுடைக் கொடிய தாய் ஆக ஆகியிருக்க மாட்டாள்.

உலகத்தில் பிள்ளை என்னதான் கெட்டவ னாக இருந்தாலும் தந்தை இறந்தான் என்றசெய்தி

## திருவாசகத்தேன்

வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சு நெக்குருகி நிற்பவர் காண்கிலேம்
திருவாசகமிங் கொருகால் ஓதிற்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையோர் இலரே

வேதத்தை ஓதினால் உள்ளம் கரைவதில்லை, ஆனால் திருவாசகம் ஓதினாலோ உள்ளம் கரைந்து, மெய்சிலிர்த்துக் கண்களிலும் நீர் பெருகி ஓதுவா ரைத் திருவாசகம் உருக வைத்து விடுகிறது என் பதைச் சிவப்பிரகாச சுவாமிகள் மேற்கண்ட நால் வர் நான்மணிக் கோவை பாடற்பகுதியினால் எடுத்துரைத் திருக்கிறார்.

கேட்டால் துடிப்பான், அது இயல்பு. அந்த நிலை யில் உள்ள ஒருவனை, பிறர் தேற்றுவதே அரிது. அதற்கு மாறாக 'உன் தந்தை இறந்தது நல்ல தாகப் போயிற்று, போ' என்று யாரேனும் கூறத் துணிவார்களா? பிறர் கூறத் துணியாத இக் கருத்தைப் பிள்ளையின் தாய் கூறுவாளா? கற் பனையே செய்து பார்க்க முடியாத காட்சி. ஆனால் கைகேயி பரதனிடம் 'உன் தந்தை இறந்தான் அதற்காக வருந்தாதே' என்று கூறுகிறாள்.

''ஆனவன் உரைசெய அழிவுஇல் சிந்தையான்
தானவர் வலிதவ நிமிர்ந்த தானைஅத்
தேன் அமர் தெரியலான், தேவர் கைதொழ
வானகம் எய்தினான்; வருந்தல் நீ என்றாள்''

பரதனை உணர்ந்தவளாக இருந்தால் அவன் தாய் இங்ஙனம் கூறியிருப்பாளா?

மேலும் 'எனக்கு மன்னன் (தசரதன்) தர வேண்டிய வரங்களைப் பயன்படுத்தி, இராமனைக் காட்டுக்கு அனுப்பி, நாட்டை உனக்கு உடைமை ஆக்கினேன்; அது பொறுக்க முடியாமல் அவன் உயிர் விட்டான்' என்றும் கூறுகிறாள்.

''வாக்கினால் வரம்தரக் கொண்டு, மைந்தனைப் போக்கினேன் வனத்திடை; போக்கி பார்உனக்கு ஆக்கினேன், அவன் அது பொறுக்க லாமையால் நீக்கினான் தன் உயிர், நேமிவேந்து' என்றாள்.''

மகனின் பண்புக்கு முற்றிலும் மாறான செயலைச் செய்து விட்டு, அதனை மிக அலட்சிய மாகக் கூறுகின்ற தாயின் வார்த்தையைக் கேட்ட பரதனின் சூடின மலர்க்கைகள் செவியில் சூடின; புருவங்கள் ஆடின; கண்களில் நெருப்பின் கொழுந்துகள் ஓடின; கபோலங்கள் துடித்தன; மயிர்க் காம்புகள் பொடிந்தன; கைகள் தரையில் அடித்தன. வானவர் அஞ்சினர்; மற்றவர் அச்சத் தால் துஞ்சினர்; வெஞ்சினக் கூற்றுவனாம் யமனும் தம் விழி புதைத்தான்.

கடுங்கோபம் கொண்ட பரதன், தாயைக் கொல்லவும் சித்தமாகவே இருந்தான். ஆனால் இராமன் கருத்து இதை விரும்பாது என்ற எண்ணமே அவனைத் தடுத்தது.

''கொடிய வெங்கோபத்தால் கொதித்த கோள்அரி
கடியவள் தாய் எனக் கருதுகின்றிலன்
நெடியவன் முனியும் என்று அஞ்சி நின்றனன்''

மேலும் பரதன் தன் தாயை நோக்கிக் கடுமையாகப் பேசுகிறான். ''தாயே நீ அல்ல; கணவன் உயிர் உண்ட நோய்; பேய்; இன்னும் உயிரோடு இருக்கின்றாய் மாய்'' என்றான்.

இந்த நிலையில் தான் கைகேயி, பரதனின் பண்பு நலம் தன் கணக்கில் தவறி விட்டதைஉணர்கிறாள். இதனால் அவள் உன்மத்தம் பிடித்தவள் ஆகிவிடுகிறாள். மகனின் பண்பை உணராது, போனதால் என்னென்னவோ விளைந்து விட்டனவே என்ற அதிர்ச்சியில் அவள் பேசவேயில்லை. ஆம் கம்பன் இதற்கு மேல் கைகேயியைக் காப்பியம் முழுவதும் ஊமைப் பாத்திரமாக ஆக்கிவிடுகிறான்.

மேற்குறித்த கருத்துக்களால் தாய் கைகேயி பரதனைப் புரிந்து கொள்ளவில்லை என்று அறியலாம்.

**தசரதன்**

இனி பரதனுக்குத் தந்தையாகிய தசரதன் பரதனைப் புரிந்து வைத்திருந்தானா என்பதை ஆராய்வோம்.

தசரதன், இராமனுக்கு முடி சூட்ட வேண்டும் என்ற எண்ணத்திலேயே இருந்தான். தந்தைக்குப் பிறகு மூத்த மகனுக்கு அரசு என்ற மரபுப்படி அது முறையும்கூட.

ஆனால் தசரதன் என்ன காரணம் பற்றியோ, பரதன் அயோத்தியில் இருந்தால் ஒருவகையில் அவன் இராமன் முடி சூட்டுவிழாவுக்கு ஏதேனும் ஒரு வகையில் தடையாக இருக்கக்கூடும் என்று எண்ணியிருக்க வேண்டும். இங்ஙனம் ஊகிப்பதற்குத் தசரதன் பரதனை அவன் மூதாதையாகிய கேகய நாட்டிற்கு அனுப்பிய முறை இடங்கொடுக்கிறது.

மிதிலையில் நால்வருக்கும் திருமணம்முடித்து அயோத்தி அடைந்த தசரதன் பரதனை அழைத்து கூறுகிறான். அவன் கூறப்போகும் கருத்து என்ன என்பதைக் குறித்துக் கூறும் முன்னரே கம்பன் ''எண்ணுவதற்கு அரிய தன்மையுடைய ஒரு பொருளைக் கூறினான்' என்றே கூறுகிறான்.

''எண்ண அருந்தகையது ஓர்
பொருள் இயம்புவான்''

என்கிறான். அவன் கூறியதுதான் என்ன? 'பரதனே உன்னுடைய மூதாதை, (கைகேயியின் தந்தை கேகயநாடன்) நின்னைக் காணவிரும்பி ஆணை அனுப்பியுள்ளான். ஆதலால் நீ போவாயாக' என்பதே.

'ஆணையின் நினது மூதாதை ஐய! நின்
காணிய விழைவது ஓர் கருத்தன்; ஆதலால்
கேணியில் வளைமுரல் கேகயம் புக
பூணியல் மொய்ம்பினாய் போதி'' என்றனன்.

கேகயன் பரதனைக் காணும் கருத்தினன் என்பதற்கு வேறு எவ்விடத்தும் ஆதாரம் இல்லை. உடனே பரதன் இராமன் திருவடியைத்தொழுது உயிரைப் பிரிந்து உடல் சென்றதுபோலச் சென்றான். இதனைக் கம்பன்

''ஏவலும், இறைஞ்சிப் போய் இராமன் சேவடிப்
பூவினைச் சென்னியில் புனைந்து போயினான்
ஆவி அங்கு அவன் அலது இல்லை ஆதலால்
ஓவல் இல் உயிர் பிரிந்து உடல் சென்றது
என்னவே''

இங்கு 'ஏவலும் பரதன் புறப்பட்டான்' என்று கம்பன் கூறுவதிலிருந்து, தசரதன் தன் விருப்பால் ஏவினான் என்றே ஊகிக்க வேண்டியுள்ளது என்றால் இராமன் முடி சூட்டு விழாவுக்கு பரதன் தடையாக இருக்கக் கூடுமோ என்ற ஒரு ஐய உணர்வு தசரதன் உள்ளத்தில் இருந்ததாகவே கொள்ள வேண்டும்.

கம்பனின் சொற்களைக் கொண்டு இந்தஊகம் உறுதியாக்கப்படுமானால் இராமனை ஆவியாக (உயிராக)க் கருதும் பரதனைத் தசரதன் புரிந்து கொள்ளவில்லை என்று தெளியலாம்.

கைகேயி தன் மகன் பரதனுக்கு அரசு வேண்டும் என்றும், சீதை கேள்வன் வனம் போக வேண்டும் என்றும் கேட்ட வரங்களில் உறுதியாக நின்ற போது தசரதன் நயமாகவும் பயமாகவும் பல உரைக்கின்றான். கைகேயி காலில் விழுந்துதசரதன் இரக்கின்றபோது, பரதன் உள்ளத்தைத் தசரதன் புரிந்து கொண்டது போல ஒரு தொடர் வெளிப்படுகிறது. 'கைகேயி! நீ நாடு வாங்கிக் கொடுத்தாலும் அதனைப் பரதன் ஏற்க மாட்டான்' என்று தசரதன் கூறுகிறான். இங்ஙனம் கூறுவதிலிருந்து பரதன் உள்ளத்தைத் தசரதன் உணர்ந்துவிட்டதுபோலவே தெரிகிறது. ஆனால் இக்கருத்தைச் சொல்லி முடிப்பதற்குள் அதைத் தொடர்ந்து 'அப்படியே அவன் ஏற்றுக் கொண்டாலும் அதனை நாடு ஏற்றுக் கொள்ளாது' என்றும் கூறுகிறான். இவ்வாறு கூறுவதால் தசரதன், பரதன் உள்ளத்தைஉணர்ந்து கொண்ட பாங்கில், 'உன்மகன் அரசை விரும்ப மாட்டான்' என்று கூறியதாகக் கொள்ள முடியாது என்பதும், மகன் மீதுள்ள பாசத்தால் நாடு கேட்கும் கைகேயி உள்ளத்தில் 'உன்மகனேஇதை விரும்பான்' என்ற கருத்தைப் பதியவைத்து அவள் போக்கை மாற்றும் முயற்சியே என்பதும் உணரப் படும்.

அதனால் தந்தையாகிய தசரதனும் பரதனைப் புரிந்து கொள்ளவில்லை என்பது மேற்குறித்த இரண்டு இடங்களிலும் பரதனைக்குறித்து தசரதன் உணராமையை ஊகத்தின் அடிப்படையிலேயே செய்ய வேண்டியுள்ளது எனப் பலர் நினைக்கலாம்.

## திருப்புகழைப் பாடப்பாட வாய்மணக்கும்

ஞானம் பெறலாம் நலம் பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம் பெறலாம் - மானவீ
டேறலாம் யானைக் கிளையான் திருப்புகழைக்
கூறினார்க் காமேஇக் கூறு.

ஆறுமுகந் தோன்றும் அழகியவேல் தோன்றுமவன்
ஏறுமயில் தோன்றும் எழில் தோன்றும் - சீறிவரு
சூரன் முடியைத் துணித்தோன் திருப்புகழைப்
பாரில் வழுத்தினோர் பால்.

பரதன் தூய உள்ளத்தைத் தசரதன் உணராமையை வெளிப்படையாகவே காட்டும் ஒரு இடத்தை நோக்குவோம்.

கைகேயி கேட்ட வரங்கள் இரண்டையும் ஈந்த தசரதன் மூர்ச்சையுற்றான். பின்னர்த் தெளிந்தான். பின்னர் வசிட்டரை அழைத்துக் கைகேயி பற்றி ஒரு கொடுஞ் சாபத்தை விடுகிறான். அது என்னவெனில் கைகேயியிடம் யான் பலபடியாக யாசித்தேன்; இரந்தேன். அவள் உள்ளம் மாறவில்லை; அதனால் அவள் என் மனைவி அல்ல, அவளைத் துறந்து விட்டேன்; எனக் கூறினான் தசரதன்.

''இன்னே பலவும் பகர்ந்தேன்
இரங்கா தாளை நோக்கிச்
சொன்னேன், இவள் என் தாரம்
அல்லள், துறந்தேன்,''

இதுவரை தசரதன் சொன்ன வார்த்தைகள் முற்றிலும் நியாயமே. காரணம், தன்னுயிர் போவதற்கே ஒரு மனைவி காரணமாக இருக்கிறபோது எந்தக் கணவனும் இத்தகைய சாபத்தைக் கூறுவது இயற்கையே என்பதால்.

ஆனால் தசரதன் அந்த அளவோடு நிற்கவில்லை. கைகேயியைத் தொடர்ந்து தன் மகன் பரதனுக்கு மிகக் கடுமையான சாபம் ஒன்றை வழங்குகிறான். பரதனுக்கு மிகுந்த இழிநிலையையுண்டாக்கக் கூடிய சாபத்தைக் கூறுகிறான். இதனையும் வசிட்ட முனிவனிடத்தில் கூறுகிறான்.

'முனிவா! மன்னனாக ஆகப் போகின்ற அந்தப் பரதன் தன்னையும் என்மகன் என்று எண்ணமாட்டேன். நான் இறந்தால் செய்யும் இறுதிச் சடங்கின் உரிமை அவனுக்கு இல்லை' என்று கூறுகிறான்.

''மன்னே ஆவான் வரும் அப்
பரதன் தனையும் மகன் என்று
உன்னேன் ; முனிவால் அவனும்
ஆகான் உரிமைக்கு என்றான்''

இது பரதனை நோக்கிக் கூறப்பட்ட கருத்து என்பதை எண்ணுகிறபோது, தசரதன் தன் மகனின் தூய உள்ளத்தை முற்றிலும் உணரவே இல்லை என்பது புலப்படவில்லையா? கைகேயி நாடகத்தில் பரதனுக்குப் பங்கு இருக்க முடியாது என்பதைத் தசரதன் உணர்ந்திருப்பானானால்தனக்கு இறுதிச் சடங்கு செய்யும் உரிமை மகனுக்கு இல்லை என்று மறுத்திருப்பானா?

இவ்வுலகில் இன்னார்க்கு இன்னார் பிள்ளை என்பதை உணர்த்தும் உரிமையே இறுதிச் சடங்கு செய்வதில் தானே அமைந்துள்ளது. அத்தகு பெருவாய்ப்பை - உரிமையை பரதனுக்குத் தசரதன் மறுப்பது, பரதன் தூய நெஞ்சை அவன் புரிந்து கொள்ளவில்லை எனத் தெளிவாகக் காட்டுகின்றது.

மேற்குறித்த கருத்துகளால் தந்தை தசரதன் பரதனைப் புரிந்து கொள்ளவில்லை என்பதை அறியலாம்.

(தொடரும்)

---




நூலின் பெயர் : புனிதச் சிந்தனைகள்

நூலாசிரியர் : ஆர்.எம்.வீ.

விலை : ரூ.6.00

பக்கம் : 72

தொகுப்பு : டாக்டர் த. அமிர்தலிங்கம்

வெளியீடு : செவ்வேள் பதிப்பகம்
பி:3 தாடண்டர் நகர்
சைதாப்பேட்டை,
சென்னை.600015.

மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பொற்கால ஆட்சியில் அறநிலையத்துறை ஆற்றிவரும் சாதனைகளை மாண்புமிகு ஆர்.எம்.வீ. அவர்கள் புனிதச் சிந்தனைகளாக வழங்கியுள்ளார். இந்நூலில் ''புரட்சித் தலைவரின் தெளிவான சமயக் கொள்கை'' ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' ''பண்புதான் ஆன்மீக நெறி'' ''சாதி பாகுபாடின்றி அனைவரும் வணங்கலாம்'' ''முதல் தலைவர் திருஞானசம்பந்தர்'', ''பஞ்ச பூதத் தலங்கள்'' ''எல்லோரும் அர்ச்சகர் ஆகலாம்'' ''ஆலய வழிபாட்டு முறைகளில் அறிவின் அடிப்படை'' ''திருமுறைகளை ஓதுவோம்'' முதலான எண்ணற்ற கருத்துகள் மாண்புமிகு ஆர்.எம்.வீ. அவர்களின் மகத்தான சிந்தனைத் திறனை நமக்குக் காட்டுகின்றன. இந்நூல் எல்லோரும் படித்துப் பயன் கொள்ள வேண்டிய மிகச் சிறந்த நூலாகும்.



# திருவள்ளுவர் திருமூலர் வள்ளலார்

புலவர் சிவ. இராமலிங்கம்

இனி, இந்த அட்டாங்கயோகத்தின் எட்டு உறுப்புக்களை அறிவோம். அவை (1) இயமம் (2) நியமம் (3) ஆசனம் (4) பிராணாயாமம் (5) பிரத்தியாகாரம் (6) தாரணை (7) தியானம் (8) சமாதி என்பனவாகும்.

(1) இயமம்: கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பொறிவழி செல்லாமை, அடக்க முடைமை, நடுவுநிலைமை, பகுத்துண்ணல், கட்காமம் இல்லாமை ஆகிய நெறிகளில் வழுவாது நிற்றல் (மந்திரம்-554).

(2) நியமம்; தூய்மை, அருள், ஊண் சுருக்கம் பொறை, நேர்மை, உறுதியுடைமை, வாய்மை இவற்றை உடையவனாய், தவம், செபம், தானம், சிவவிரதம் சித்தாந்தக் கேள்வி, ஆகியன செய்தல் (மந்திரம் 556, 557)

(அ) மனம், மொழி, மெய், ஆகிய திரி கரணங்களும் தூய்மையாக இருத்தல்.

(ஆ) ஆத்ம சமர்ப்பணம்—தனதுவாழ்வை ஈஸ்வரனிடம் ஒப்படைத்தல், இவைகளும் நியமத்தில் அடங்கும்.

(3) ஆசனம் : ஆசனமுறைகள் 126. அவற்றுள், பத்மாசனம் யோகத்திற்குச் சிறந்தது. வலது தொடையின் மேல் இடது காலையும், இடது தொடையின்மேல் வலது காலையும் வைத்து, கைகளை அவற்றின் மேல் வைத்தல் பத்மாசன மாகும்.

(4) பிராணாயாமம்; சுவாசிப்பதன் மூலம் உண்டாகிற பிராணனுடைய போக்கு வரவை ஒழுங்குபடுத்துவது பிராணாயாமம். இதனால் பிராணனும் மனமும் வசப்படும்.

(அ) பூரகம்: இடகலை எனப்படும் இடது நாசியால் 16 மாத்திரை (வினாடி) கால அளவு உள்ளுக்கிழுத்தல் (வலது நாசியை கட்டை விரலால் மூடிக்கொண்டு இடது நாசியால் காற்றை உள்ளுக் கிழுக்கலாம்).

(ஆ) கும்பகம்: அவ்வாறு உள்ளிழுத்த வாயுவை 64 மாத்திரை அளவு உள்ளே நிறுத்துதல்.

(இ) ரேசகம்: பிங்கலை எனப்படும்வலது நாசியால் கும்பகம் செய்யப்பட்ட வாயுவை 32 மாத்திரை அளவு மெல்லென விடுதல் (அப் பொழுது இடது நாசியை கட்டை விரலால் மூடிக் கொள்ளலாம்) (மந்திரம் 568)

தொடக்க நிலையில் திருமூலர் குறிப்பிட்ட மாத்திரை அளவு பூரகம், கும்பகம், ரேசகம் செய்வதில் சிரமம் இருக்கும். இவற்றின் விகிதாச் சாரம் 1:4:2 இவற்றை 5, 20, 10 என்ற அளவில் தொடங்கி, திருமூலர் கூறியுள்ள 16, 64, 32 என்ற அளவிற்கு முறையே பூரக, கும்பக, ரேசகங் களை முடிவில் எட்டலாம்.

பிராணாயாமத்தால் நாடிகள் விம்ம காற்று உள்ளே இழுக்கப்பட்டு நிறுத்தப்படுவதால், இக் கும்பகத்தில் மூலாதாரமும், தொண்டைப் பகுதி யில் உள்ள விசுத்தியும் நெருக்கப்படுவதால், பிராணன் - அபானன் நெருக்குண்டு சுழுமுனை திறந்து, குண்டலினி சக்தி மேலேறத் தொடங்கும்.

நெற்றியில் நான்கு விரற்கடை அளவுதொழிற் படாதிருக்கும் பிராணசக்தி பிராணாயாமத்தால் தொழிற்படும். அப்பொழுது சகஸ்ரதளம் எனப் படும் சிரசு உறக்கம் விழிப்பின்றி எப்போதும் பிரகாசிக்கும் துரிய பூமியாக இருக்கும். (மந். 564 முதல் 577 வரை).

இயம, நியம, ஆசனங்களில் உறுதி பெற்ற வரே பிராணாயாமத்தை உறுதியாகச் செய்து சுழுமுனையைத் திறக்கச் செய்ய இயலும்.

5. பிரத்தியாகாரம்: மனதின் ஆற்றல் களெல்லாம் ஐம்பொறிகள் வாயிலாகப் புறத்தே சென்று விரயமாகி வருகின்றன. இந்திரியங்கள் இழுத்துச் செல்லும் இடங்கட்கெல்லாம் மனது ஓடியலைகிறது. மனதை அவ்வாறு ஓடாது தடுத்துநமது ஆணையின் கீழ் உறுதியுடன் வைத்திருத்தல் பிரத்தியாகாரம்.

திருமூலர் மனதை எவ்வாறு வைத்திருந்தால் அது அடங்கியிருக்கும் என்று சில திருமந்திரப் பாடல்களில் கூறியுள்ளார்.


(அ) மூலாதாரத்தில் உள்ள குண்டலினியை மேலெழுப்பும் பிராசாத மந்திரத்தை ஓதி மூலா தாரத்தெழும் சோதியில் மனம் லயித்திருத்தல். (மந்.579, 584).

(ஆ) சுவாதிட்டான சக்கரத்தில் சுடர்மய மாயுள்ள குண்டலினியைச் சிந்தித்து அதில் நிறுத்தினால் ராஜயோகம் கிட்டி உடல் வலிவு பெறும் (மந். 580)

(இ) இதயக் கமலத்தில் உள்ள அனாகதச் சக்கரத்தைச் சிந்தனை செய்து மனதை அதில் நிறுத்தினால் ராஜயோகம் கிட்டி உடல் வலிவு பெறும் (மந். 581)

(ஈ) மனம் கண்டத்தில் உள்ள விசுத்திச் சக்கரத்தைச் சிந்தனை செய்து அதில் நிலைத்து நிற்பின் நிலவொளி உள்ளே தோன்றும் (மந்.582)

(உ) புருவநடுவில் விளங்கும் உணர்வுமயமான சோதியில் மனம் நினைந்து நினைந்து உருகுதல் பிரத்தியாகாரப் பெருமை (மந். 585)



திருமூலர்

இவ்வாறு மனம், குண்டலினி சக்திதுளைத்து செல்லக்கூடிய ஆதார சக்கரங்களில் சிந்தனையைத் தீவிரமாகச் செலுத்த, புறவுலகில் அதன் இயக்கம் தடைப்பட்டு யோகத்திலே ஒருமுனைப்பட்டு நிற்கும். அப்போது வேதங்கள் தேடும் சிவனை உணர்ந்திருக்கலாம் என்கிறார் திருமூலர்.
(மந். 578)

(6) தாரணை : மனதை ஒரு பொருள் மீது உறுதியாக நிலைநாட்டுதல் தாரணை ஆகும். மனம் 'ஓம்' எனும் நாதத்தில் ஒடுங்க, சகஸ்ராரப் பெரு வெளியில் இறைவனையே உறுதியாகச் சிந்தித்து நிற்பது தாரணை என்கிறார் திருமூலர்.(மந். 597)

பிரத்தியாகார நில்லயில் மனம் மூலாதாரம் முதல் புருவ நடுவில் உள்ள ஆக்ஞா சக்கரம் வரை நிறுத்தப்படல் வேண்டும் என்பதும், தாரணை நிலையில் மனம் சிரசில் உள்ள சகஸ்ராரப் பெரு வெளியில் இறைவனைச் சிந்தித்து நிற்க வேண்டும் என்பதும் திருமூலர் தெரிவித்துள்ள கருத்துக் களாகும்.

(7) தியானம் : அட்டாங்கயோகத்திலே மிக முக்கியமானது தியானம். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம்மற்றும் தாரணை ஆகியவற்றில் சிறந்து நின்றால் தியானம் சித்திக்கும்.

(அ) உருவத்தோடு கூடிய பராசக்தியையும், ஒளிபொருந்திய சிவனையும் தியானம் செய்யலாம் (மந். 598).

(ஆ) மூலாதாரத்தில் உள்ளது அக்கினி மண்டலம். அதற்கு மேல் கண்டம் வரையுள்ளது சூரிய மண்டலம். அதற்கு மேல் சகஸ்ரதளத்தில் விளங்குவது சந்திர மண்டலம். இந்த மூன்று மண்டலங்கட்கும் பிரமன், திருமால், உருத்திரன் ஆகியோர் வேர்கள். இவர்களைச் சுழுமுனையில் தியானித்தால் இந்த மூன்று மண்டலங்களையும் கடந்து சிதாகாயத்தில் அருணோதயம் போன்ற ஒளியைக் காணலாம். (மந். 610 முதல் 614 வரை).

(இ) புருவ நடுவில் உள்ள ஆக்ஞா சக்கரத்தில் வெண்ணிற ஒளியைத் தியானிக்க வேண்டும். முடிவில் சிதாகாயப் பெருவெளியில் ஆகாய கங்கை பாய்வது போன்ற உணர்வு தோன்றும் (மந். 600 601).

(ஈ) புருவநடு ஆக்ஞாசக்கர ஒளியின் தியான முதிர்வில் (1) மணியோசை (2) கடலோசை (3) யானை பிளிறல் (4) குழலோசை (5) மேக இடியோசை (6) வண்டு ரீங்கார ஓசை (7) தும்பியொலி (8) வளையோசை (9) பேரிகை ஒலி (10) யாழோசை ஆகிய தசநாதங்கள் நுண்மை யாகக் கேட்கும். மேற்கூறியவற்றில் வல்லோசை தொடங்கி மெல்லோசையில் முடியும். (மந். 607)

(உ) தியான முதிர்வில் இந்த நாதம் கடந்த பின்னர், சிவன் பராசக்தியோடு விளங்கித்தோன்று வான். (மந். 609.)

தியானிக்கும் வழிமுறையையும் தியானத்தின் போது பெறக்கூடியனவற்றையும் இவ்வாறு திருமூலர் கூறியுள்ளார்.

தியானயோகம் குறித்து பகவத் கீதையில் கீதாசாரியான கண்ணன் கூறியுள்ள கருத்துக்களை யும் அறிந்து கொள்ளுதல் நலம் பயக்கும். இது குறித்து கீதையில் வரும் முக்கிய கருத்துக்கள் கண்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்தவாறே கீழே தரப்படுகின்றன.

(1) யோகி யாருக்கும் தென்படாது தனிய னாய் இருந்து கொண்டு, உள்ளத்தையும் உடலை யும் அடக்கி ஆசையகற்றி உடைமைப்பொருள் இலனாய் யாண்டும் மனதை ஒடுக்க வேண்டும்.

(2) சுத்தமான இடத்தில் உறுதியானதும், அதிக உயரம் இல்லாததும் மிகத் தாழ்வில்லாத தும், மான்தோல், தர்ப்பை இவைகளையுடையது மாகிய ஆசனத்தை நன்கு அமைத்துக் கொண்டு, மனதை ஒருமுகப்படுத்தி, மனம் இந்திரியங்கள் இவற்றின் செயல்களை அடக்கி தேகம், தலை, கழுத்து இவைகளை நேராக அசையாது வைத்துக் கொண்டு உறுதியாயிருந்து, தன் மூக்கு நுனியைப் பார்த்துக் கொண்டு உள்ளம் அமைதி பெற்று, அச்சத்தையகற்றி பிரமசரிய விரதம் காத்து, மனதை அடக்கி, சித்தத்தை என்பால் இசைத்து, என்னைக் குறியாகக் கொண்டு யோகத்தில் அமர்ந்திருக்க வேண்டும்.

இங்ஙனம் யாண்டும் மனதை தியானத்திலே நிறுத்தி உள்ளத்தை அடக்கிய யோகி என்னி டத்துள்ள முக்தியிலே முற்றுப் பெறுகிற சாந்தி எய்துகின்றான். (அத். 6: சுலோகங்கள் 10 முதல் 15 வரை).

(3) யார் என்னை எல்லாவற்றிலும் காண் கிறானோ, எல்லாவற்றையும் என்னிடத்திலும் காண்கிறானோ அவன் காட்சியினின்று நான் மறை வதில்லை. அவனும் என் காட்சியினின்று மறை வதில்லை. (அத். 6—சு. 30).

(4) மனதை அடக்காதவன் யோகம் அடை யான். மனதை அடக்கி உபாயத்தால் முயல் பவனுக்கே அதை அடைய இயலும் (அத் 6-சு. 36)

(5) தவசிகளைவிட யோகி மேலானவன். கல்வி ஞானம் உடையவர்களைவிட மேலானவனாக அவன் கருதப்படுகிறான். கர்மிகளைவிட அவன் சிறந்தவன். ஆகையால், அர்ஜுனா யோகியாவாயாக.

(அத். 6—சு. 46).

(6) யார் சிரத்தையுடன் சித்தத்தை என்பால் வைத்து, என்னை தியானிக்கின்றானோ அவன் யோகியர் எல்லாருள்ளும் மிக மேலானவன்.

(அத். 6—சு. 47)

அட்டாங்கயோகத்திலே கூறப்பட்ட இயம நியமங்கள் பிரத்தியாகாரம், தாரணை ஆகியவை கீதாசாரியன் கூறிய தியானயோகத்திலே இடம் பெறுகின்றன. தன்னைத் தியானிப்பவன் தன்பால் உள்ள முக்தியிலே முற்றுப் பெறுகிற காந்தி எய்துகிறான் என்பது கீதாசாரியன் கூறியுள்ள கருத்தாகும்.

தியானத்தின்போது, பாம்பு, உடலில் ஊர்ந்தாலும் உணரமுடியாத ஒருமுகப்படுத்தப்பட்ட மனம் வேண்டும். அவ்வளவு தீவிரதியானம் பழக்கத்தில் கொண்டு வரப்படல் வேண்டும். ஆறு ஆதாரங்களின் நாயகர்களையும் தியானத்தில் தீவிரமாக வழிபட, அவர்கள் குண்டலினி சக்தி தம்மைக் கடக்கத் துணைபுரிவர். நாம் விரும்பும் வடிவத்தில் இறைவன், நமது இதயக் கமலத்தில் விளங்குவானாகையால் ஒவ்வொருவரும் தான் வழிபடும் தெய்வத்தைத் தியானிக்கலாம். எந்த உருவத்தில் இறைவனைத் தியானம் செய்தாலும், சமாதி நிலையில் அருவ ஒளியாகவே இறைவனது காட்சி கிடைக்கும் என்பது யோகியர் அனுபவ பூர்வமாகக் கண்ட உண்மையாகும்.

8. சமாதி: தியானத்தின் முதிர்வே சமாதியாகும். சுழுமுனை வழியாக ஆறு ஆதாரங்களைக் கடந்து செல்லும் குண்டலினி சக்தி சகஸ்ரதளத்தை அடைந்து சோதிப் பிழம்பாய் ஒளிறும் (மந். 618, 619). சிந்தனையற்று சிதாகாசமாகிய சந்திர மண்டலத்தில் பேரொளியோடு சிவனாயிருத்தல் சமாதி (மந். 628). குண்டலினி சக்தி சுழுமுனை வழியாக சகஸ்ரதளம் எனும் சந்திரமண்டலம் சென்றவுடன் சந்திர மண்டல ஒளியால் அமுதம் பெருகி, உடலெங்கும் பரவி உடல் பொன்வண்ணமாக ஒளிறும். (மந். 669)

ஒப்பற்ற சோதியாம் சிவனும், மலமற்ற சைதண்யமாகிய ஆன்மாவும் சமாதி நிலையில் பிரிப்பின்றி ஒன்றாகும் (மந். 630). சமாதி நிலையில் உள்ளவர்கட்கு 64 கலைகளும் ஓதாமல் விளங்கும் (மந். 631). முனிவரும் தேவரும் எதிர்கொள சிவபதம் கிட்டும் (மந். 633). அணிமா, லகிமா, மகிமா, பிராத்தி, கரிமா, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் எனப்படும் அட்டமாசித்திகளும் சித்திக்கும் (மந். 671-688). சுழுமுனையில் ஒன்றுபட்ட பிராணன் ஒளிபொருந்திய சகஸ்ரதளப் பெருவெளியில் பொருந்த உடல் பொன்னாக மாற, சாதகர் சமாதியில் நிலைபெற்றிருப்பார் (மந். 716, 717). சாதகனது உடல் சிவசக்தி ஆலயமாகி ஒளியில் விளங்கும் (மந்.719). பிராணாயாம சித்தியின் முடிவு பூரண சமாதியாகும். (மந். 722).

இவ்வாறு அட்டாங்கயோகத்தில் பிராணனை சுழுமுனை எனப்படும் நடுநாடியில் இயங்கச்செய்து சகஸ்ரதளத்தில் நிறுத்தி, குண்டலினி சக்தியையும் ஆறு ஆதாரங்களின் வழியாக சகஸ்ரதளத்தில் இருக்கச் செய்து அதனை ஒளிமயமாக்கி, பூரண சமாதியில் ஆன்மா சிவனுடன் ஐக்கியமாகி பிறப்பு இறப்பற்ற நிலை கைவரப் பெறும் என்று திருமந்திரம் கூறுகின்றது.

யோகமுதிர்வில் இறைவன் ஒளிமயமாகக் காட்சி தந்து அட்டமா சித்திகளையும் வழங்கி, இறுதியில் பிறவாப் பேற்றை அளித்து, யோகியை முக்தியிலே நிறுத்தி சாந்தியளிக்கிறான். இதுவே அட்டாங்க யோக நெறியின் பயன்.

பூரண சமாதிநிலை அடையப்பெறும் சாதனைக்கு 12 ஆண்டுகள் பிரம்மச்சரியமும், ஒருமுகப் படுத்தப்பட்ட மனமும், மிதமான உணவும், இயம நியமங்களில் கூறப்பட்ட இதர நியதிகளும் கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

யோகத்தால் மட்டுமன்றி, பக்தியாலும்ஞான வைராக்கியத்தாலும் முக்திநிலை அடையலாம் என்று திருமூலர் கூறுகின்றார்.

'பக்தியும் ஞானவை ராக்கிய மும்பர
சித்திக்கு வித்தாஞ் சிவலோகமே சேர்தலான்
முத்தியின் ஞான முளைத்தலால் இம்முளை
சத்தி யருள்தரில் தானெளி தாமே'

(மந். 1585)


(இன்னும் வரும்)

---

## கடவுள் தருவார்

கடவுளை அடைய வேண்டும், அவரைக் காண வேண்டும் என்ற ஏக்கம் உண்மையாகவே இருக்க வேண்டும். அப்படி யார் ஒருவருக்கு இருந்தாலும் அவருக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் சூழ்நிலைகளை எல்லாம் கடவுளே நிச்சயமாகச் செய்து கொடுத்து விடுவார்.

-இராமகிருட்டிணப் பரமஅம்சர்.






டாக்டர் த. அமிர்தலிங்கம்

---

பதினைந்து நாழிகை நேரத்தில் இன்னும் பத்து யோசனைத் தூரத்திற்குப் பரந்திருக்கும் படைக் கடலை நீந்திச் சயத்திரதனையும் தேடிக் கண்டுபிடித்துக் கொன்றாக வேண்டிய இக்கட்டான இந்த நேரத்திலும் கொஞ்சநேரம் கிருட்டிணார்ச்சுனர்கள் இளைப்பாற விரும்பினார்கள். நல்லவர்கள் ஓய்ந்து இருக்க விரும்பினாலும் கூட அதற்கு அவர்களின் எதிரிகள் அனுமதி கொடுப்பதில்லை. இங்கேயும் அதைப்போலவேதான் துரியோதனனின் நாற்பெருஞ் சேனைகளும் திரண்டு வந்து கிருட்டிணார்ச்சுனர்களை நாலாபுறமும் சூழ்ந்து வளைத்துக் கொண்டு விடுகின்றன.

இளைப்பாறிடும் பரிகளைத் தேர்களில் பூட்டிப் பார்த்தசாரதி இன்னும் தேரைக் கூட ஆயத்தப்படுத்திடவில்லை. அதற்குள் கௌரவப் படைகள் நாலாபுறமும் வந்து சூழ்ந்து கொண்டு விட, அர்ச்சுனன் ''கண்ணா! நீ நிதானமாகவே தேரைத் தயார் செய். நான் அதற்குள் தரையில் நின்றே இவர்களை ஒரு கை பார்க்கிறேன் '' என்று கூறித் தன் காண்டீபத்தை வளைக்கிறான்.

வந்த கௌரவ வீரர்களில் பெரும் பகுதியினர் அர்ச்சுனனோடு போரில் ஈடுபட, மற்றையோர் அர்ச்சுனன் உண்டாக்கிய பொய்கையைக் கண்டு அதிசயித்து, அதில் இறங்கி நீர் அருந்துகிறார்கள். ''அடடா, என்ன சுவையான நீர்! அமுதமும் இந்நீருக்கு ஈடாகாதே'' என்று அவர்கள் வியந்து, மற்றவர்களையும் நீர் பருகிடச் செய்கிறார்கள். ''நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை'' என்பதைப் போல, அர்ச்சுனன் ஒருவன் வாங்கி வந்த வரத்தால் உண்டான பூம்பொய்கை, அவனுடைய பகைவர்களுக்கும் கூடப் பயன்படுகின்ற சிறப்பினைக் காண்றோம்.

அர்ச்சுனனை எதிர்த்துக் கடல் அலைகளைப் போல் வரிசை வரிசையாக வந்த வண்ணம் இருக்கின்றன கௌரவர்களின் தேர், குதிரை, யானை, மற்றும் காலாள் படைகள். அர்ச்சுனன் அவை அனைத்தையும் வென்று அவற்றின் பிணங்களை மலைபோல் குவிக்கின்றான். அப்பிண மலைகளின் மீது அர்ச்சுனன் ஏறிநின்று போர் புரிந்திடும் போது தான், தன்னுடன் போர் புரிய துரியோதனனும் கூட வந்து நிற்பதைக் காணுகின்றான்.

துரியோதனன் தன்னிடம் துணிந்து போர் புரிய வந்து நிற்பது கண்டு வியப்படைகின்றான் அர்ச்சுனன். அப்பொழுது கண்ணபெருமானும் தேருடன் வர, அதில் ஏறிக்கொள்ளும் அர்ச்சுனன் ''என்ன கண்ணா இது விந்தை? நான் போர் புரிகிறேன் என்றால் நான் நிற்கும் இடத்திற்குக் குறைந்தது ஒரு யோசனை தூரமாவது தள்ளியே நிற்பதல்லவா துரியோதனனின் வழக்கம். இன்

றென்ன அவ்வழக்கத்திற்கு மாறாக என்னிடமே போர் புரிய துணிந்து வந்திருக்கிறான். அபூர்வமான வில், ஆற்றல்மிக்க கணைகள், அழிவு படாத கவசம், சிதைவுபடாத தேர் இப்படி இவற்றில் ஏதேனும் ஒன்றை அவன் எவரிடமாவது பெற்று வந்திருக்கின்றானா?'' என்று வினவுகிறான். ''பிரமனுடைய கவசத்தைத் துரோணர் கொடுக்க அதை அணிந்து கொண்டு வந்திருக்கின்றான். இல்லாவிட்டால் துரியோதனனுக்கு உன்னை எதிர்க்க ஏது துணிவு? அழிக்க முடியாத அப்பிரம கவசமும் உன்னால் இன்று அழிந்துபடுவது நிச்சயம்'' என்று கூறும் கண்ணபெருமான் தம் தேரை ஓட்டிச்சென்று துரியோதனனுக்கு எதிரில் கொண்டு போய் நிறுத்துகிறார்.

அர்ச்சுனன் முதலில் துரியோதனனைச் சூழ்ந்து நிற்கும் துணைப் படைகளின் மீது அம்புகளை ஏவுகின்றான். ஆகாயத்திற்குப் பந்தல் இட்டதைப் போலப் பாய்கிற அர்ச்சுனனின் அம்புகள் எதிர் நிற்கும் வீரர்களின் கிரீடங்கள் தோறும், மலை நிகர்க்கும் தோள்கள் தோறும், வயிறுகள் மற்றும் மார்புகள்தோறும் பாய்ந்து ஊடுருவ, இரத்தம் வெள்ளமென பீறிடுகிறது. பகைவர்களின் நீண்ட விற்கள் நாண் அறுபடுகின்றன. பெரிய தேர்களின் சக்கரங்கள் உடைபட்டு உருளுகின்றன. குதிரைகளின் நா தெறித்து விழுகின்றன. யானைகள் கால்கள் அறுபட்டுத் துடித்துக் கதறுகின்றன. துரியோதனின் துணைப் படைகள் இவ்வாறு சிதைந்தழிய, கர்ணன், சகுனி, சல்லியன் ஆகியோர் மீண்டும் துரியோதனனுக்குத் துணையாகப் போர் புரிய வந்து முன்போலவே தோற்றுப் புண் பட்டு ஓடிவிடுகிறார்கள்.

துரியோதனன், பிரமகவசம் தந்த துணிவினால் அர்ச்சுனனுக்கு முன் தைரியமாக நின்று தானும் சில அர்த்தசந்திரப் பாணங்களை அர்ச்சுனன் மேல் தொடுக்கிறான். அவ்வம்புகள் நெருங்கிடாமல் அர்ச்சுனன் விட்ட மாற்றுக் கணைகளால் இரண்டிரண்டாக உடைபட்டுப் பயனின்றி அழிகின்றன. அர்ச்சுனன் அநேக அம்புகளைத் துரியோதனன் மேல் ஏவ, வலிய அவ்வம்புகளும் கூட, பிரம கவசத்தின் மேல் பட்டு பெரு மலையில் விழும் சிறுநீர்த்துளிகளைப் போல சிதைந்து பயனின்றிப் போகின்றன. அதைக் காணும் அர்ச்சுனன் தன் முயற்சியில் தளர்ந்து போய் விடுகிறான். எதிர்த்தவர்களை நொடியில் எமனுலகம் காண வைக்கும் ஆற்றல் மிகும் கணைகள் துரியோதனனுக்குத் தோற்பதா என மனம் சலித்து விடுகிறான் அர்ச்சுனன். வலிமை மிக்க வேலாயுதம் ஒன்றை வரவழைத்துத் தன் இரு கரங்களாலும் வேலாயுதத்தை ஏந்தி, துரியோதனன் மார்பை நோக்கி அவ்வேலை வீசுகிறான் அர்ச்சுனன். சிவபெருமான் சூரபதுமனை அழிக்க முருகனுக்கு அளித்த வேலாயுதம் போன்றது அது. துரியோதனனின் பிரமகவசத்தைப் பொடிப் பொடியாக்கச் சீறிப் பாய்கிற அர்ச்சுனனின் ஆற்றல்மிகும் வேலை அசுவத்தாமா இடைமறித்துத் தன் கணை ஒன்றால் இரண்டு துண்டுகளாகத் துணித்து வீழ்த்தி விடுகிறான். அசுவத்தாமனின் இச்செயலைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை அர்ச்சுனன். தான் வீசிய வேல் சிதைந்து போனதைக் கண்டு அர்ச்சுனன் மேலும் மனம் தளர்ந்து சோர்ந்து போகிறான்.

''வீரன் விட்டன சரங்கள் அவன் ஒண் கவசம்
மேலுறப் படுதலின்றி விழுகின்ற நிலை
ஓரிமைப்பிலன் அறிந்து குமரன் கை அயிலோடு
உரைக்க உவமம் பெறு விடங்கொள் அயில்
தேரினிற் பொலிய நின்று இரு கை கொண்டு நனி
சீறி மெய்ப்பட எறிந்தனன் எறிந்தளவில்
வார்சிலைக் குருவின் மைந்தன் அது கண்டு அதனை
வாளியிற் துணிபடும்படி மலைந்தனனே''

(பதினான்காம் போர்ச் சருக்கம், 85)

சில நேரங்களில் கடினமான காரியங்களும் எளிதில் கைகூடி விடுகின்றன. சில நேரங்களில் எளிய காரியங்கள் கூட அரிய முயற்சிகளாலும் கைகூடுவது இல்லை. இந்த விந்தையை எண்ணி வியக்கும் அமைதியான சிந்தை இப்பொழுது அர்ச்சுனனிடம் இல்லை. அதனால்தான் தன் தலையைக் கண்டவுடன் அவ்விடத்தை விட்டுப் பறந்தோடி விடக் கூடிய துரியோதனனிடம் தான் அதிகக் காலத்தை வீணாக்கித் தன் முயற்சியும் கூட வெற்றி பெறாமல் தோற்பது எண்ணி அதிக மனச்சோர்வு கொள்கிறான் அர்ச்சுனன். அர்ச்சுனனின் மனச் சோர்வை மாற்றிட கண்ணபெருமானும் மனம் கொண்டு பாஞ்ச சன்னியத்தை எடுத்துத் தம் திருவாயில் வைத்து முழக்குகிறார். பாஞ்ச சன்னிய சங்கின் முழக்கம் குருசேத்திரப் போர்க்களம் முழுதும் ஒலிக்கிறது.

பார்த்தசாரதியின் பாஞ்ச சன்னிய முழக்கத்தைத் தருமரும் கேட்கிறார். பாஞ்ச சன்னியம் முழங்கிடும் அதன் தன்மையிலிருந்தே அர்ச்சுனன் சோர்வடைந்து இருக்கிறான் என்பதையும், அர்ச்சுனனின் சோர்வை மாற்றும் பொருட்டே பார்த்தசாரதி சங்கெடுத்து முழக்குகிறார் என்பதையும் தருமர் உணர்ந்து கொண்டு விடுகிறார். எதனால் அர்ச்சுனனுக்கு இளைப்பு உண்டாயிற்று என்ற ஐயமும் உண்டாகத் தருமர் மனம் மிகக் கலங்கி வாடுகிறார். தனக்குக் காவல் என அர்ச்சுனன் நியமித்துச் சென்ற சாத்தகியை உடனே அர்ச்சுனன் இருக்கும் இடத்திற்கு விரைந்து செல்லுமாறு கட்டளையிடுகிறார் தருமர். ''அருச்சுனனைத் தேவர்களும் கூட வெல்ல முடியாது. மண்ணுலகில் அர்ச்சுனனை யாரே வெல்வார்? அதுவும் பார்த்தசாரதி பார்த்தனுக்குத் துணையிருக்க என்ன பயம்? வேண்டாம் மனக்கலக்கம் தருமரே!'' என்று சாத்தகி எடுத்துரைத்தும்கூட தருமர் கேளாமல் சாத்தகியை உடனே புறப்பட்டு அர்ச்சுனன் இருக்கும் இடத்திற்குச் செல்லுமாறு பணிக்கிறார்.

சாத்தகியும் தருமரின் கட்டளைக்கிணங்க இங்கே புறப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், அங்கே கண்ணபெருமான் தாமே ஒரு வேலாயுதத்தை வரவழைத்து அர்ச்சுனனுக்கு வழங்குகிறார். ''அர்ச்சுனா! இதோ இந்த வேலாயுதத்தை நீ துரியோதனன் மேல் வீசு. நிகழ்வதைப் பார்'' எனக் கூறி வேலினைக் கொடுக்கிறார். இவ் வேலினை வில்லிப்புத்தூரார் ''நரகன் தன் உயிர் கொண்டதொரு வேல்'' என்று குறிப்பிடுகிறார். நரகாசுரனை முன்னம் வதைத்து அழிப்பதற்கு எத்தகைய வேலினைப் பயன்படுத்தினாரோ அத்தகைய சக்தி வாய்ந்த வேலையே இப்பொழுது கண்ணபெருமான் அர்ச்சுனனுக்கு வழங்கி இருக்கிறார். வேலை வணங்கிப் பெற்றுக் கொள்ளும் அர்ச்சுனன், தன் ஆற்றலை எல்லாம் திரட்டித் துரியோதனன் மேல் ஏவப் பிரமகவசமும் பொடிப் பொடியாகச் சிதைகிறது. கவசம் சிதைந்திடும் அக்கணமே துரியோதனனும் அர்ச்சுனன் கண்முன் நின்றிடாமல் ஓடி விடுகிறான்.

பிரம கவசத்தின் அழிவும், துரியோதனனின் ஓட்டமும், அர்ச்சுனனுக்கு மீண்டும் புது வேகத்தை

ஊட்டுகின்றன. இதற்குப் பிறகு அர்ச்சுனனை எதிர்க்கும் அசுவத்தாமா உள்ளிட்ட எண்ணற்ற மாவீரர்கள் எல்லாம் தோல்வியையே காணு கிறார்கள்.

''மாரதர் வீழ்ந்தார் அதிரதர் மாய்ந்தார்
சாரதி களும்வன் தலைகள் இழந்தார்
நாரதர் முதலான நாகர் அநேகர்
பாரதம் இன்றே பற்றறும் என்றார்''

*(பதினான்காம் போர்ச் சுருக்கம், 94.)*

பார்த்தனின் போர் வேகத்தைக் கண்டு பாரதப் போர் இன்றுடனே தீர்ந்து போகலாம் என்றும் கூறி ஆரவாரிக்கின்றார்கள் நாரதர்முதலான தேவர்கள்.

இவ்வாறு அர்ச்சுனன் துரியோதனனின் படைகளை வதம் செய்துகொண்டிருக்கும் அற்புதம் ஒரு புறம் நடைபெற்றுக் கொண்டிருக்க, துரியோதனனின் தம்பிமார்களை வீமன் வதம் செய்யும் அற்புதமும் மற்றொருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கண்ணபெருமானின் சங்க நாதம் கேட்டுச் சாத்தகியை அருச்சுனன் இருக்கும் இடத்திற்குச் செல்லுமாறு அனுப்பி வைத்தார் அல்லவா தருமர்! அவரே பிறகு வீமனையும் கூட அருச்சுனன் இருக்கும் இடத்திற்கு விரையுமாறு கட்டளையிடுகிறார்.

''தகலரும் சாத்தகி தன்னையும் விடுத்தோம்
பகலுமேற் றிசைப்பட்டது பாஞ்ச சன்னியமும்
புகலுகின்றது போர்முகத் ததிர்குரல் பொம்ம
இகல் வலம்பட நீயும் அங்கு எழுதி என்றான்''

*(பதினான்காம் போர்ச் சுருக்கம்., 112)*

''அருச்சுனனுக்கு ஆபத்தொன்றும் இருக்காது அண்ணா! கவலை வேண்டாம். இதோ நானும் புறப்படுகின்றேன்'' என்று தருமருக்கு ஆறுதல் கூறி, அர்ச்சுனன் இருக்கும் இடத்திற்கு வீமனும் விரைந்து வந்து கொண்டிருக்கிறான். அப்படி வரும் வழியில்தான் வீமனுக்கு வாய்க்கிறது மாபெரும் வேட்டை; இதுநாள் வரை கிடைத்திராத அற்புத விருந்து.

நேற்றைய நாள் கொன்றை மாலையை இட்டுத் தன்னையும் அபிமன்யுவையும் பிரித்து, அபிமன்யுவை வஞ்சித்துக் கொன்றுவிட்ட துரியோதனனின் சூழ்ச்சியை எண்ணித் எண்ணித் துடிக்கின்றது வீமனின் உள்ளம். ஒரு அபிமன்யுவிற்கு ஈடாக எதிர்ப்படும் துரியோதனனின் தம்பிகளை எல்லாம் வதைத்தழிப்பது என்ற தீர்க்கமான முடிவோடு தான் கதாயுதத்தையும் தோளில் ஏந்திக் கொண்டு வீரகம்பீரமாகப் புறப்பட்டு வருகிறான் வீமன். இப்படி வந்து கொண்டிருக்கிற வீமனின் கண்களில் துரியோதனனின் தம்பிகள் விந்தனும், விந்தரனும் முதலில் தென்படுகிறார்கள். வீமன் தன் கதாயுதத்தை வீச, அவ்விருவர் தலைகளும் ஆகாயத்தில் பறக்கின்றன. அவர்கள் உடலிலிருந்து பெருகும் இரத்தமும் கடலில் போய் கலக்கிறது. விந்தனும், விந்தரனும் எப்படி மடிகிறார்களோ அப்படியே அவர்களின் தேர்ப் பாகர்களும் தேர்க்குதிரைகளோடு மடிகிறார்கள்.

## பொன்மொழி

**உனக்கு மனஅமைதி
வேண்டுமானால்
பிறரிடம் குற்றம் காணாதே**

**—சாரதா அம்மையார்**

---

''விந்தன் விந்தரன் இருவரும் மேவிடு முனையிற்
தந்தம் வாசியும் தேர்விடு பாகரும் தாமும்
அந்தரம் தனிற் தலைகள் போய் முகில்களை
அலைப்பப் சிந்துசோரி அம்பெருங்கடல்
அலைத்திடச் சிதைந்தார்''

*(பதினான்காம் போர்ச்சுருக்கம், 117)*

அடுத்து வீமனின் கண்களில் தென்படுகிறவர்கள் குண்டல போசி, தீர்க்கலோசன், இந்திரசேனன் ஆகிய மூவர். துரியோதனனின் தம்பிகள் ஆகிய இம்முவரும் கூட வீமனின் கதைக்குப் பலியாகிறார்கள். அர்ச்சுனன் இருக்கும் இடத்திற்கு விரைவாகச் சென்று சேரும்படியாக உத்தரவிட்டுத் தருமர் வீமனை அனுப்பியிருந்தார். தருமரின் இந்தக் கட்டளையை வீமன் பொருட்படுத்துவதாக கவே தெரியவில்லை. அர்ச்சுனனுக்குத் தளர்ச்சி, தோல்வி என்பதாக ஒரு சிறு ஐயம் கூட வீமனுக்கு இல்லாதபோது அவன் ஏன் பரபரக்க வேண்டும்? ஆகவேதான் வீமன் நின்று நிதானமாகப் போர் செய்து துரியோதனனுடைய தம்பிகளை எமனுலகிற்கு அனுப்பி வைப்பதிலேயே குறியாக இருக்கின்றான். துரியோதனனின் தம்பிகள் முப்பதுபேர் ஒரிடத்தில் ஒன்றாகத் திரண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் அப்படி இப்படி ஓடாதபடி வீமன் ஒருவனே வளைத்துக் கொள்கிறான்.

''சேர முப்பது குமாரர்கள் சென்றமர் மலைந்தோர்
ஒரொருத்தருக்கு ஓரொரு சாயகம் உடற்றிச்
சூரன் மெய்த்துணை நோதகும்படி உடன்
தொலைத்தான்
மாருதச் சுதன் வில்லாண்மை யார் வல்லார்?''

*(பதினான்காம் போர்ச் சுருக்கம், 119)*


விசயனுக்கொப்ப வீமனும் தன் வில்லாற்றலைக் காட்டி, முப்பது தம்பிகளை ஒரு சேர முப்பது அம்புகளை ஏவி, வீர சுவர்க்கத்திற்கு அனுப்பிவைக்கக் காண்கிறோம்.

இவ்வாறு வீமன் அர்ச்சுனனை நோக்கிப் புறப்பட்டுவந்த சிறிது நேரத்திற்கெல்லாம் துரியோர்தனனின் 35 தம்பிகள் பரலோகம் போய்ச் சேர்ந்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட வீமனை நெருங்கிப் போர் செய்ய யார்தான் துணிந்து முன்வருவார்கள்? ஐந்து வியூகங்களை ஒன்றுக்குள்

ஒன்றாக அமைத்தாரே துரோணர். அந்த வியூக அமைப்புகள் அத்தனையும் சிதைய கௌரவ வீரர்கள் அனைவரும் தலை தப்பித்தால் போதும் என அஞ்சி ஓடுகிறார்கள். தங்களுக்குள் தாங்களே முட்டி மோதி அல்லோல கல்லோலப் படுகிறார்கள். வீமனை எதிர்ப்பதற்கு எவருமே துணிந்திடாத இந்நிலையில் துரோணர் தாமே வீமனைத் தடுத்துப் போர் புரிய வருகிறார். அருச்சுனன் விநய மொழி கூறி எப்படித் துரோணரைக் கடந்து முன்பு சென்றானோ அதைப்போலவே வீமனும் கூட ''என் சிறந்த குருநாதரே! உம் திருவடிகளை என் தலைமேல் வைத்து வணங்குகின்றேன்'' என்று வந்தனம் கூறவும் அதைத் தம் காதுகளிலேயே வாங்கிக் கொள்வதில்லை துரோணர். ''யாருக்கு வேண்டும் உன் வந்தனம்''? என்று கூறுவதைப் போல வீடுமர் வில்லை வளைத்து வீமன் மேல் கணைகளை ஏவுகிறார். தன் வணக்கத்தையும் பொருட்படுத்தாமல் குருநாதர் இப்படி உதாசீனமாக நடந்து கொள்ளவே வீமன் ''அப்படியா சேதி குருநாதரே! சரி, உமக்குச் சரியான பதிலை நானும் தருகிறேன்'' என்பதாக, துரோணர் ஏறி நிற்கும் தேரை அப்படியே தன் இரு கைகளால் தூக்கி, வானில் விட்டு எறிகிறான். வானில் போரை வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கும் தேவர்கள்மேல் வீசப் பட்டதைப் போல் ஆகாயத்தில் அத்தேரும், பறந்து சென்று பிறகு பூமியில் வந்து விழுந்து நொறுங்கி அப்பளம் போல் சிதைந்து விடுகிறது. தேர்க் குதிரைகள் தலை சிதறி மாண்டுப் போக துரோணர் உயிர் தப்பிப் பிழைத்துக் கொள்கிறார். ஆனால் அவருடைய எலும்புகள் அனைத்தும் நொறுங்கி ஒடிந்து போகின்றன. ''வேக வெம் பரியும் தலை சிந்தின, வேதியன் தனதென்பும் ஒடிந்ததே'' என்கிறார் வில்லிப்புத்தூரார்.

துரோணர் வீமனை எதிர்த்து எலும்புகள் நொறுங்கி, இன்றைய தினம் முழுவதும் மீண்டும் போர் ஆற்ற முடியாத நிலைக்கு ஆளாகி விடுகிறார். இந்நிலையில் அர்ச்சுனனிடம் பல முறை தோற்று புறமுதுகு காட்டி ஓடி வந்த கர்ணன் இப்பொழுது வீராவேசமாக வந்து வீமனை எதிர்க்கிறான். வீமனும், கர்ணனும் முதலில் வில்யுத்தமே புரிகிறார்கள். வில்லாற்றலிலும் வீமன் வல்லவனே என்று பலரும் பாராட்ட விற்போர் புரிந்திடும் வீமன், கர்ணனின் தேரை வலிமை வாய்ந்த அம்புகளால் நீறுபடுத்துகிறான். சிதைந்து போகும் தேரிலிருந்து குதித்து கர்ணன் தப்பி ஓட, அவனை விட்டு விடுவோமா எனக் கூறி விரட்டுவதைப்போல் பாய்கின்றன வீமன் விடும் கணைகள். கர்ணனின் மகன் விருசசேனன் ஆபத்திற்கு உதவும் அருமந்த பிள்ளையாக அங்கே விரைந்து வந்து தன் தேரைத் தந்தைக்குத் தந்து உதவுகிறான். கர்ணனுக்கு உதவ வரும், துரியோதனின் தம்பிகள் மேலும் இருவர், வீமனின் கணைகளுக்குப் பலியாகி மாய்கிறார்கள்.

விருசசேனின் தேரில் விரைந்து ஏறிக் கொள்ளும் கர்ணன் ''வீமா! இனி நான் உன்னைவிட மாட்டேன். உன் தலையை நான் அறுத்து வீழ்த்துவேன்; இல்லாவிடில் நீ என் தலையை அறுத்து வீழ்த்திவிடு: நம் இருவரில் இனி ஒருவர் தான் வாழ முடியும்'' என்று முழங்குகிறான். 'ஐவரில் அர்ச்சுனன் அல்லாத மற்ற நால்வரைக் கொல்லேன்' என்று குந்திதேவிக்குத் தான் முன்பு செய்தளித்திருந்த சத்தியத்தையும் கூட மறந்து இப்பொழுது கர்ணன் வீமனின் தலையை அறுத்து வீழ்த்துவதாக வீர முழக்கம் செய்கிறான் என்றால் ''ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு'' என்ற பழமொழி உண்மையே அல்லவா! தருமரே வீமனை ஆத்திரக்காரன் என்று பல நேரங்களிலும் குறைப்பட்டுக் கூறியிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் ஆத்திரக்காரன் ஆகிய வீமனோ இப்பொழுது



தன் ஆத்திரத்தையெல்லாம் கட்டுக் படுத்திக் கொண்டு ''கர்ணா! உன்னை நான் கொல்லமாட்டேன். உன்னை நான் கொன்று விட்டால் உன்னைக் கொல்வதாக என் தம்பி அர்ச்சுனன் செய்திருக்கும் சபதம் பொய்த்துப் போகும் ஆதலால் நான் உன்னைக் கொன்றிட மாட்டேன். ஆனால் உன்னை வென்று இக்களத்தை விட்டு விரட்டியடிப்பேன், இது நிச்சயம்'' என்று வீமனும் வீர முழக்கம் செய்கிறான்.

வீமனும் கர்ணனும் மீண்டும் வீராவேசமாக போர் புரிகிறார்கள். இம்முறை கர்ணன் விடும் அம்புகளினால் வீமனுடைய தேரும் சிதைந்து அழிந்து விடுகிறது. தன் தேர் சிதைய தரைக்குத் தாவும் வீமன் தன்னுடைய சத்துருகாதினி கதையை நல்லவேளையாக எடுத்துக் கொண்டு விடுகிறான். சத்துருகாதினி கதை இருக்கும் காரணத்தினால் தான் கர்ணன் வீசிட வீமனின்தலையை நோக்கிப் பறந்து வரும் வேலினைக் கதாயுத்தால் தாக்கி உடைத்து எறிகிறான் வீமன். கர்ணனுக்குத் துணையாக வந்து போர் புரியும் துரியோதனனின் தம்பி துன்முகனும் வீமனின் கதைக்குப் பலியாகிறான். துரியோதனன் தம்பிகள் மேலும் அறுவர், வீமனோடு போரிட வந்து விண்ணகம் அடைகிறார்கள். துரியோதனனின் தம்பிகளில் இது வரை இன்றைய நாள் நடைபெற்றிருக்கும் போரில் மொத்தம் 44 பேரை கொன்று சரித்திரம் படைத்து விடுகிறான் வீரபராக்கிரம வீமன்.

கௌரவர் நூறு பேர்களில் நல்லோர்களாலும் நம் வீமனாலும் நேசிக்கப்படுகின்ற ஒருவன் உண்டென்றால் அவன்தான் விகர்ணன். நத்தையில் முத்தாக வந்த அந்த நல்லவனை யார்தான் நேசிக்க மாட்டார்கள்? பாஞ்சாலியின் துகிலைக் களைந்திட துரியோதனன் ஆணை இட்ட பொழுது ''தகாது'' என்று நீதியை எடுத்துரைத்தவன் விகர்ணனே. பாண்டவர்க்காக தூது நடந்த கண்ணனைக் கொல்வதற்குத் துரியோதனன் படுகுழி அமைக்க ஆலோசித்த போதும் ''தூதரைக் கொல்வது நீதியன்று'' என்று கடிந்துரைத்தவன் விகர்ணனே. தீயவரில் தூயவன் ஆகிய அவ்விகர்ணன் வீமனிடம் போரிடும் பொருட்டு வந்து வீமனைப் போருக்கு அழைக்கிறான். ஆனால் வீமனோ விகர்ணனுடன் போர் செய்ய மறுக்கிறான். ''கௌரவர் நூறு பேரையும் கொல்வேன் என்று நான் செய்திருக்கும் சபதம் பொய்த்தாலும் பரவாயில்லை. விகர்ணா! உன்னுடன் நான் போர் செய்யவும், உன்னைக் கொல்லவும் விரும்பிடவில்லை. நீ விலகிப் போ'' என்கிறான் வீமன்.

விகர்ணனின் பழிக்கு ஆட்படாத நேர்மை உள்ளத்தை மதித்து, நன்றி போற்றும் நற்குணம் காரணமாகவே வீமன் அவனுடன் போர்புரிய மறுக்கிறான். ஆனால் விகர்ணனோ விலகிச் சென்றிடாமல் தானேவலிய கணைகளை வீமன்மேல் தொடுத்துப் போரினைத் தொடங்குகின்றான். இப்பொழுது வீமனிடம் விகர்ணன் உரைத்திடும் ஒரு சொல் அவனுடைய உயர்ந்த உள்ளத்தை நமக்கு உணர்த்தி நம்மை நெகிழ வைக்கிறது.



''எம்மு னோர்கள் அனைவரும் உங்கையில்
வெம்முனைக் கணையால் விளிந்தேகவும்
உம்முன் யானொரு வேன் உய்வேன் கொலோ?
வம்மின் வார்சிலை வாங்குகென்று ஓதினன்''

(பதினான்காம் போர்ச் சுருக்கம், 147)

''என் உடன்பிறந்தார்கள் அத்தனைப்பேரும் செத்தபிறகு நான் ஒருவன் மட்டும் சாகாமல் எதற்காக வாழவேண்டும்?'' என்று விகர்ணன் உரைத்திடும் இம்மொழிகள் ''நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப் போர்க்கோலம் செய்து விட்டார்க்கு உயிர் கொடாது அங்குப் போகேன்'' என்ற கும்பகர்ணனின் மொழிகளை நமக்கு நினைவுபடுத்தி விகர்ணன் மேல் நமக்கு நல்ல மதிப்பை உண்டாக்குகின்றன.

விகர்ணன் வீமனோடு போரினைத் தொடங்கி விட, வீமனும் வேறு வழியின்றி விகர்ணனோடு போரிட்டு, அவனுடைய தலையையும் தன் கதையினால் சிதைத்து வீழ்த்துகிறான். வீரவிகர்ணனும் இறுதிவரை தருமத்திற்காகத்தன் உடன் பிறந்தார்களோடு போராடி, அது முடியாமல் போகவே தான் கொண்ட பாசம் வேசம் அன்று; மெய்யானதே என்பதை மெய்ப்பித்துக் காட்டிப் பாசத்திற்காகத் தலை தொடுத்துத் தன் சரித்திரத்தையும் முடித்துக் கொண்டு விடுகிறான். அவனுடைய தியாகம் அவனைக் கொல்லும் வீமனின் கண்களிலும் நீரைவரவழைத்து விடுகிறது., போரைக் கண்டு நிற்கும் தேவர்கள் கண்களிலும் கூட நீரை வரவழைத்துவிடுகிறது. இறப்பிலும் இறவாத புகழை நிலை நாட்டி மாய்கிறான் வீர விகர்ணன்.

இப்படி விகர்ணனையும் சேர்த்து 45 துரியோதனனின் தம்பிகளை ஒரே நாளில் கொன்று சரித்திரம் படைக்கிற வீமனும், சாத்தகியும் அர்ச்சுனன் இருக்கும் இடத்தைச் சென்றடைகிறபோது கதிரவனுடைய அஸ்தமனத்திற்கு ஓரிரண்டு நாழிகைகளே மிச்சம் இருக்கின்றன. வீமார்ச்சுனர்கள் ஒன்று சேர்ந்தபிறகு அவரைத் தடுத்துப் போர் புரியும் ஆற்றல் எவருக்கு உண்டு? எதிர்த்தவர்கள் எல்லாம் எமனுலகம் காண எஞ்சியிருக்கும் சில யோசனை தூரங்களையும் வேகமாகவே கடந்து சயத்திரதனைத் தேடுகிறார்கள் வீமார்ச்சுனர்கள். அவர்கள் எங்குத் தேடியும் சயத்திரதனைக் காணவில்லை. குருசேத்திரக் களத்தில் சயத்திரதன் இருந்தால் அல்லவா அர்ச்சுனனின் கண்களுக்கு அவன் தென்படுவான்? சயத்திரதன் களத்தில் நின்றால் மடிவது நிச்சயம் என்று திண்ணமாகத் தெரிந்த பிறகும் துரியோதனன் அவனை அங்கே நிற்க வைத்திருப்பானா? உயிருக்கு அஞ்சும் கோழையான சயத்திரதன் தான் அங்கே நின்று கொண்டிருப்பானா? என்ன வஞ்சகங்கள் புரிந்தும் பாண்டவர்களை வெல்வது என்பதுதானே துரியோதனனுக்கு நீதி, வேதம். அதனால்தான் தோல்வி நிச்சயம் என்று தெரிந்தவுடன் துரியோதனன் சயத்திரதனைப் பாண்டவர்கள் எவர் கண்ணுக்குப் பட்டுவிடாதவாறு நிலவறைக்குள் கொண்டுபோய் மறைத்து வைத்து விடுகிறான். புற்றுக்குள் ஒளிந்துறையும் பாம்பைப்போல நிலவறைக்குள் போய் ஒளிந்து மறைந்து கொண்டு விடுகிறான் சயத்திரதனும்.

சயத்திரதன் நிலவறைக்குள் மறைந்து கொண்டிருக்கும் விவரம் முதலில் தெரியாமல் அர்ச்சுனன் ஒரு புறமும், வீமன் ஒரு புறமும், சாத்தகி ஒருபுறமுமாகச் சயத்திரதனைத் தேடி வருகிறார்கள். இப்படி ஆளுக்கொரு பக்கமாகச் சயத்திரதனைத் தேடி வரும் வேளையில்தான் சாத்தகியைத் தடுத்து பூரிசிரவா யுத்தம் செய்கிறான். முதலில் நடைபெற்ற விற்போரில் இருவரும் சலித்துப் பிறகு மற்போரில் ஈடுபடுகிறார்கள். மற்போரில் பூரிசிரவா வென்று சாத்தகியைத் தரையில் தள்ளி, அவன் மார்மீது ஏறி அமர்ந்து கொள்கிறான். சாத்தகி திமிறி எழ முடியாதவாறு பூரிசிரவா அவனைப்பிடி போட்டு நெருக்குகிறான். சாத்தகியும் பூரிசிரவாவின் பிடியிலிருந்து திமிறி எழமுடியாமல் திணறுகிறான். பூரிசிரவா தன் இடையிலிருந்த குறுவாளைச் சட்டென எடுத்து சாத்தகியின் கழுத்தில் வைத்து அவனைத் தலைவேறு உடல் வேறாக்கிக் கொன்றுவிட முயலுகிறபோதுதான் கண்ணபெருமான் அவ்வழியாகத் தேரைச் செலுத்தி வந்தவர், பூரிசிரவா தன் தம்பி சாத்தகியின் கழுத்தை அறுக்க முற்படும் காட்சியைக் கண்டு துணுக்குறுகிறார். அர்ச்சுனனுக்கு அக்காட்சியைக் காட்டிக் கண்ணபெருமான் ''பார்த்தா பார் அங்கே! உடனே கணையைத் தொடுத்துப் பூரிசிரவனைக் கொல்; சாத்தகியைக் காப்பாற்று'' என்றுகட்டளையிடுகிறார். ஆனால்பார்த்தனுக்கோ பூரிசிரவாவும், சாத்தகியும் போர்புரிந்து கொண்டிருக்கும்போது, தான் குறுக்கிடுவது பிடிக்கவில்லை. ஆகவே ''நான்மாட்டேன்'' என்பதாக அர்ச்சுனன் மறுக்க ''அபிமன்யுவிற்கு அவர்கள் செய்த அநியாயத்தை மறந்துவிட்டாயா அர்ச்சுனா?'' என்று நினைவுபடுத்துகிறார் கண்ணபெருமான். உடனே அர்ச்சுனனும் மனம் கொதித்துக் கணையை ஏவுகிறான். சாக இருந்த சாத்தகி இதனால் பிழைத்துக் கொள்ள, பூரிசிரவா தன் தலை அறுபட்டு தரையில் விழுந்து துடிதுடித்துச் சாகிறான்.

பூரிசிரவா துடிதுடித்துச்சாவதை துரியோதனனும் காண்கிறான். ''இதுதான் யுத்த தருமமா கண்ணா!'' என்று அவன் கண்ணனைப் பரிகசிக்கிறான். அபிமன்யுவை மனம் கூசாமல் அநியாயமாகப் பலரைக் கொண்டு வளைத்துக் கொன்ற துரியோதனன் தன்னிடமே நியாய அநியாயத்தைப் பற்றிப் பேசவே கண்ணபெருமான் புன்னகைத்து ''துரியோதனா! நேற்று நீ அபிமன்யுவைக் கொன்றது தருமம் ஆனால், முதல்நாள் போரின் போது சுவேதனைக் கொன்றதும் தருமம் ஆனால், பூரிசிரவனைப் பார்த்தன் இப்பொழுது கொன்றது கூட தருமம்தான்'' என்று தயங்காமல் பதில் அளிக்கிறார்.

''நென்னல்நீர் அபிமன் தன்னை நேரற வென்ற
போரும்
முன்னமே சுவேதன் தன்னை வீடுமன் முடித்த
போரும்
மன்னற முறை தவாமல் மலைந்தனீர் என்று
நக்கான்
தன்னை வந்தடைந்தோர்க்கு உற்ற தளர்வெலாம்
ஒழிக்கும் தாளான்''

(பதினான்காம் போர்ச் சருக்கம் 160)

முள்ளை முள்கொண்டே களைந்தாக வேண்டும். சூழ்ச்சிக்காரர்களையும் சூழ்ச்சிகள் செய்தே வென்றாக வேண்டும். வஞ்சனைப் பாதையில் பதினாறடி பாய்ந்து துரியோதனன் வெற்றிக்கு முயல்வானேயானால், தாமும் அதேபாதையில் முப்பத்தாறடி பாயவும் தயாராக இருப்பதைத் தான்

## அருணகிரிநாதர் பாடிய பாடல்களும் திருத்தலங்களும்

அருணகிரிநாத சுவாமிகள் பதினாறாயிரம் திருப்புகழ்ப் பாக்களைப் பாடினார். அவற்றுள் இன்று கிடைக்கப் பெறுபவை 1330 பாடல்கள் மட்டுமே ஆகும். அருணகிரிநாதரால் பாடப்பட்ட தமிழகத் தலங்கள் 182. வைப்புத் தலங்கள் 20. பிறமாநிலத் தலங்கள் 11. இலங்கைத் தலங்கள் 3. ஆகமொத்தம் 216 திருத்தலங்கள்.

கண்ணபெருமான் பூரிசிரவாவைக் கொன்ற இந்த ஒரு செயலின் மூலம் துரியோதனனுக்கு உணர்த்துகிறார். சயத்திரதனை நிலவறைக்குள் துரியோதனன் மறைத்துவைத்திருக்கும் சூழ்ச்சியை வெல்வதற்கும்கூட மாற்று சூழ்ச்சியொன்றைக் கண்ணபெருமான் இப்பொழுது புரிகிறார். வியக்கத்தக்க இச்சூழ்ச்சியைக் கண்ணபெருமான் இப்போது செய்யாவிட்டால் அர்ச்சுனனின் வாழ்வும் இன்றோடே முடிந்துபோகும். கதிரவன் மறைய இன்னும் ஒரு நாழிகைநேரமே இருப்பதைக்காணும் கண்ணபெருமான், தம் கைச் சக்கரத்தை அனுப்பி கதிரவனை மறைத்து, சூரியன் அஸ்தமனம் ஆகிவிட்டதாக, ஒரு மாயை செய்கிறார்.

''பாராழி அவலமறப் பாண்டவர்தம் இடர்தீரப்
பார்த்தன்வாழ
பேராழி அணை துயிலும்பெருமிதமும்உடன்மறந்து
பிறந்த மாயோன்
ஓராழி எழுபரித் தேர் உடையானை மாயையினால்
ஒழிக்கத் தன்கைக்
கூராழி பணித்தலும் அக்களம்போலச் சிவந்தன
அக்குடபால் எங்கும்''
(பதினான்காம் போர்ச்சருக்கம்.)

பார்த்தன் வாழவேண்டும் என்பதற்காகவும், பாண்டவர்களின் துன்பம் தீர வேண்டும் என்பதற்காகவும், ஆழிசூழ் உலகத்தின் பாரம் தீர்த்து சுகம் நல்கவும் அவதாரம் செய்தவர் கண்ணபெருமான். பாற்கடலில் சுகமாகத் துயின்றிருக்கக் கூடிய பெருமிதத்தை மறந்து நமக்காகத் தோன்றியவர் கண்ணபெருமான். தம் அவதார நோக்கம் நிறைவேறிடும் பொருட்டே ஒற்றைச் சக்கரத் தேரில் ஏழு குதிரைகளைப் பூட்டி உலகை வலம் வந்து கொண்டிருக்கின்ற கதிரவனைத் தம் கூராழியைக் கொண்டு மறைப்பிக்கிறார் பார்த்தசாரதி. குருசேத்திரக் களம் முழுவதும் இரத்தத்தால் சிவந்திருப்பதைப் போல, மேற்கு திசை முழுவதும் சிவக்க, எங்கும் இருள் பரவுகிறது.

கண்ணபெருமான் தம் கை ஆழியால் கதிரவனை மறைப்பித்திருக்கும் மாயை பார்த்தனுக்கே தெரியவில்லை என்றால் மற்றவர்களுக்கு எப்படித் தெரியும்? சயத்திரதனைக் கொன்றிடும் தன் முயற்சி அனைத்தும் வீணாகிப் போனதை எண்ணி மனம் வாடும் அர்ச்சுனன், அபிமன்யு இருக்கும் விண்ணுலகம் சென்று அவனைத் தான் கண்டுமகிழும் விழைவால் உடன் நெருப்பை மூட்டி அதில் முழ்கி உயிர் விடத் துணிகிறான். அர்ச்சுனன் எரிமுழ்குவதைத் தடுக்கும் வழியறியாமல் தரும, வீம, நகுல சகாதேவர்கள் கிடந்து தடுமாற, துரியோதனனோ மனம் பூரித்து நிலவறைக்குள் மறைந்திருக்கும் சயத்திரதனையும் போய் அழைத்துக் கொண்டு அர்ச்சுனன் எரிமுழ்கி மாளும் அக்காட்சியைக் கண்டு ஆனந்திக்க அங்கு வந்து சேர்கிறான்.

அக்கினியை வலம் வந்து வணங்கி அதில் வீழ்ந்து இறக்கப் போகும் அர்ச்சுனனைத் தடுக்கும் கண்ணபெருமான் கௌரவர் கூட்டத்தில் முன்வரிசையில் நிற்கும்சயத்திரதனைக்காட்டுகிறார். ''அர்ச்சுனா! சயத்திரதனைப் பார். காண்டீபத்தை எடு; கணைகளைத் தொடு, சயத்திரதன் தலை தனியாகட்டும். அவன் தலையை நீ தரையில் வீழ்த்தக் கூடாது. கணைகளை இடைவிடாமல் செலுத்தி சயத்திரதனின் தலையை சமந்தப் பஞ்சக மடுவில் தவம் செய்துகொண்டு இருக்கும் இவன் தந்தை விருத்தசத்திரன் கையிலே போய் விழச் செய். மகன் தலையைத் தந்தையே தரையில் வீழ்த்தட்டும். அவனும் தலை வெடித்துச் சாகட்டும்'' என்று கட்டளையிடுகிறார் கண்ணபெருமான். கண்ணபெருமானின் கட்டளையை ஏற்கவும் சயத்திரதனைகொல்லவும்அர்ச்சுனன் மறுக்கிறான். ''கண்ணா! கதிரவன் மறைந்துவிட்டபிறகு என் சபதப்படி நான் அக்கினியில் மூழ்கி மாள்வதுவே நியாயம். நான்சாகிறேன்'' என்கிறான் அர்ச்சுனன். அப்பொழுதுதான் அர்ச்சுனனுக்கே கதிரவனைத் தம் கைஆழியைக் கொண்டு மறைப்பித்திருக்கும் உண்மையை - மாயையை எடுத்துக் கூறுகிறார் கண்ணபெருமான். ''முறைக்கு மாறாக எதையும் செய்யமாட்டான் இந்த முகுந்தன். முறை எது, குறை எது என்பதெல்லாம் யான் அறிவேன். நிலவறைக்குள் பதுங்கியிருந்த சயத்திரதனை வெளிக்கொணரவே கதிரவனை மறைத்திருக்கிறேன். உண்மையில் கதிரவன் இன்னும் மறையவில்லை. ஆகவே சயத்திரதனைக் கொல்வது உன் சபதப்படி நியாயமே ஆகும். எடு காண்டீபம்; தொடு கணையை'' என்று கண்ணபெருமான் அர்ச்சுனனை வேகப்படுத்த, இதற்குப் பிறகும் அர்ச்சுனன் வாளா இருப்பானா?

அர்ச்சுனனின் மரணத்தை வேடிக்கை பார்க்க வந்து நிற்கும் சயத்திரதனின் தலை ஆகாயத்தில் பறக்கிறது. ஆ ஆ! அந்த அற்புதத்தை எப்படி வர்ணிப்பது! காண்டீபத்திலிருந்து இடைவிடாமல் பறக்கும் அம்புகள் சயத்திரதனின் தலையை எங்கும் கீழே விழுந்து விடாதவாறு ஏந்திக் கொண்டு பறக்கின்றன; சமந்தப் பஞ்சக மடுவில் தவம்புரிந்து கொண்டிருக்கும் அவன் தந்தை விருத்த சத்திரனிடமே கொண்டுபோய் சேர்க்கின்றன. அருக்கிய சலமெடுத்துவிட்டுக் கொண்டிருக்கும் விருத்தசத்திரன் தன்கையில் பொத்தென்று ஒரு பொருள் வந்து விழுவதைப் பார்க்கிறான். அது அவனுடைய ஆசை மகனுடைய அறுபட்ட தலையாகவே இருக்க ''ஆ மகனே!'' என்று அதிர்ச்சியில் அலறித் தன் மகன் தலையைத் தானே தரையில் வீழ்த்துகிறான். ''தன் மகன் தலையை எவன் தரையில் வீழ்த்துகிறானோ அவனும் தலைவெடித்துச் சிதறிச் சாக வேண்டும்'' என்று வேண்டி விருத்தசத்திரன் வரம் வாங்கியிருந்தான். அவ்வரத்தின்படி தன் மகன் தலையைத் தானே தரையில் வீழ்த்தி, தன் தலையும் வெடித்துச் சிதற தன் மகனுடனேயே அவனும் மாண்டுப் போகிறான். அபிமன்யுவைஅநியாயமாகக் கொன்று அநியாயமாகவே அர்ச்சுனனையும் சாகடிக்க ஆசைப்பட்ட சயத்திரதன், அந்தோ பரிதாபம்! தானும் செத்து தன் தந்தையையும்கூட சாகடித்து, கொடு நரகம் போய் சேர்ந்து விடுகிறான்.

முன்பு சதுர்த்தசியை அமாவாசை ஆக்கி அற்புதம் புரிந்த பார்த்தசாரதிதான் இப்பொழுது தம் கை ஆழியால் மறையாத கதிரவனை மறைய வைத்தும் மாயம் நிகழ்த்தினார்; எண்ணியது எண்ணியபடி சயத்திரதனையும் அவன் தந்தை விருத்தசத்திரனையும் ஒன்றாக வீழ்த்திய வீர சாகசத்தை நிகழ்த்தி முடித்த பிறகு தம் கைச் சக்கரத்தை அவர் திரும்ப வரவழைத்துக் கொள்கிறார். உண்மையில் சூரியன் அஸ்தமனம் ஆகஇன்னும் ஒரு பனைமரத் தூரம் இருப்பதை அப்பொழுதுதான் அனைவருமே காண்கிறார்கள். ''துரியோதனா! நீ நிலவறைக்குள் பதுக்கிய சயத்திரதனை வெளிக் கொணர நானும் கதிரவனை சிறுதுநேரம் மறைப்பித்தேன். உன் சூழ்ச்சிக்கு என் சூழ்ச்சி சரிதானே!'' என்பதைப் போல் கண்ணபெருமான் துரியோதனனைப் பார்த்துப் புன்னகை புரிய, கண்ணபெருமானின் மதியுகத்தைக் கொண்டாடிப் போற்றுகிறார்கள் இந்திராதி தேவர்கள்.

(தொடரும்)

# வினாவும்



# விடையும்

சீடன்: கடவுளை உருவமில்லாதவர் என்கிறோம். அப்படியானால் திருவுருவங்களை வைத்து வழிபடுவது ஏன்?

குரு ; உயிருக்கு வடிவமில்லை. ஆனால் உயிரும் உடலினுள் புகுந்து உடலின் வடிவத்தையே தன் வடிவமாய் காட்டுகிறது, அதுபோல கடவுளும் இயற்கையோடு இயற்கையாகக் கலந்து நின்று அவற்றின் வடிவங்களையே தமது வடிவமாய் காட்டுகிறார். கடவுள் எங்கும் நிறைந்திருப்பவர். ஆகவே எந்தவொரு பொருத்தமான வடிவத்தைக் கொண்டும் அவரை வழிபடலாம். வடிவமில்லாத ஒன்றை நினைத்தல் ஒரு சிறிதும் இயல்வதில்லை. ஆதலால் கடவுளை உருவம் செய்து வழிபடுகிறோம். வடிவங்களில் சிறந்தது மக்கள் வடிவம். அதனால்தான் மக்கள் வடிவில் வைத்துக் கடவுளை வழிபடுகின்றோம்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



# வருணனின் சரணாகதி

டாக்டர் த. அமிர்தலிங்கம்

[1]

கருணையங் கடலாம் இராமர்
கடலுக்குத் தெய்வம் ஆகும்
வருணனின் வரவை வேண்டி
வாரமாய் விரதம் நோற்க
பெரியவன் பெருமை எண்ணிப்
பொருக்கென வாரா தேதான்
அருஞ்சினம் இராமர்க் காக்கி
ஆடினான் ஆட்டம் அன்று.

கோபமும் இராமர் கொண்டு
கோதண்டம் கையில் தாங்கி
சாபங்கள் எய்து சாட
சஞ்சல முற்று வந்து
பாபங்கள் தீர்த்துக் காக்க
பதமலர் பணிந்து போற்றி
ஆபத்துக் குதவ வந்த
அருங்கதை அன்று கண்டோம்


திருமுறை நாளும் ஓதி
திருமழை வேண்டு கின்றோம்
உருகியே பாடி நாளும்
உயர்மழை வேண்டு கின்றோம்
வருணனும் அன்று போல
வேடிக்கை காட்டு கின்றான்
வருவதாய் காட்டி வாரான்
வரட்சியால் வாட்டு கின்றான்

[2]

அரக்கர்கள் தம்மோ டாற்றும்
அருஞ்சமர் ஏதும் உண்டோ?
பெருங்கடற் கப்பால் மீன்கள்
போரிடும் பூசல் உண்டோ?
வருணனை வேண்டி நாங்கள்
மாதமாய் தவம் புரிந்தும்
கருணையே இன்றி மண்மேல்
கொடுமைகள் புரிவ தேனோ?


''நல்லவர் ஒருவர் உண்டேல்
நல்மழை பெய்யும்'' சான்றோர்
சொல்லிய பாவும் பொய்யோ?
தெய்வங்கள் யாவும் பொய்யோ?
அல்லெனக் கறுத்து மேகம்
அமுதமாம் நீரைப் பெய்க!
அல்லல்கள் மாய்ந்து ஞாலம்
ஆனந்தம் கண்டு வாழ்க!













அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் மழைவேண்டி வருண ஜெபம் நடத்தப்பெற்றது. அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு வி.வி. சுவாமிநாதன் கலந்துகொண்டார்.





மேதகு குடியரசுத் தலைவர் திருமிகு ஆர். வெங்கட்டராமன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலயத் தக்கார் திரு க. பொன்னுசாமி பி.எஸ்சி. அவர்கள் பழநி முருகனுக்குப் படைக்கப் பெற்ற மலர்வேல் வழங்குகிறார்.